
# செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு 46

★

கழக வெளியீடு

XLVI 1971—1972



# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

நாற்பத்து ஆறாம் சிலம்பு

திருவள்ளுவர் ஆண்டு

௨௦௦௨—௨௦௦௩

The South India Saiva Siddhanta Works

[All Rights Reserved] Publishing Society, Tinnevelly, Ltd., [Price Rs. 10-00

Madras-1. Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1.

## 'செந்தமிழ்ச் செல்வி'

### இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்
### (EDITORIAL BOARD MEMBERS)

க. பேராசிரியர், முத்து இராசாக்கண்ணனார் அவர்கள்,
எம்.ஏ., பி.ஓ.எல்.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

உ. 'சித்தாந்த கலாநிதி' உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை

௩. டாக்டர் ந. சஞ்சீவி, எம்.ஏ., பி.எச்டி.,
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

ச. திரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்
பண்டித கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு) (லண்டன்), எம்.ஏ., பி.ஓ.எல், (சென்னை)
முன்னாள் ஆராய்ச்சித்துறைத் தலைவர், அரசகரும
மொழித்துறை, கொழும்பு.

ரு. [illegible] பூ[illegible]சிவன் அவர்கள், எம்.ஏ., டிப்.,லிங்.,
தமிழ் விரிவுரையாளர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

சு. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,
நூலகர், மறைமலையடிகள் நூல் நிலையம், சென்னை.

# உள்ளுறை


**ஆய்வுக் கோவை—ஒருதிறன் ஆய்வு**

*—பேரா. ஆ. சிவலிங்கனுர்* ௪௧௧, ௪௭௬, ௫௮௨, ௬௧௮

**ஆரியப்படைகடந்த. அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்**

*—மயிலை சீனி வேங்கடசாமி* ௩௪௩

**இசைத்தட்டில் கழக வெளியீடு பிள்ளையார் போற்றி** ௬௩௬

**இந்திய அலுவலக நூலகம்** ௩௨௧

**இந்தியா—பாகிஸ்தான் போர்—நாட்டு மக்கட்கு இந்தியத் தலைமை அமைச்சரின் அறிவிப்பு** ௨௨௨

**இராசராச சோழன் சிலைத் திறப்புவிழா** ௫௪௪

**“இளந்தமிழா!”—திறனுய்வு**

*—புலவர் சொ. சிங்காரவேலன்*, M. A. ௫௫௭

**இறைமையில் இசைந்த வாழ்வு**

*மா. சண்முகசுப்பிரமணியம் பி.ஏ. பி.எல்.*

௨௩, ௭௧, ௧௨௧, ௨௧௨, ௩௨௭, ௪௬௭, ௫௦௬

**இனிய காட்சிகள் இரண்டு**

*—நெல்லை ந. சொக்கலிங்கம், எம்.ஏ.* ௩௬௮

**இன்னிசைத் தமிழில் இறைவழிபாடு** ௧௫௦

**உயிர் மெய்ம்முதல் வேர்ச் சொற்கள்**

*—ஞா. தேவநேயன்* ௪, ௧௪௧, ௧௮௭, ௩௩௭, ௪௭௨, ௬௬௫

**ஒப்புமை மொழியியல்**

*—டாக்டர் மா. சு. திருமலை*

&

*டாக்டர் கி. கருணுகரன், எம்.ஏ., பி.எச்டி.* ௪௫௫

**கட்சில் அரப்பா குடியிருப்பு** ௬௩௭

**கந்தர் அநுபூதி**

*—என். கே. வேலன், பி.ஏ.* ௪௬, ௬௪, ௩௭௦

**கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. நூற்றுண்டுவிழா** ௬௬௮


★

**கயிலைத் தருமபுர ஆதீனத் தலைவர் திருவடிப் பேறெய்தினர்** ௧௬௪

**கலித்தொகை உரையில் பெண்மையை இழிவுபடுத்தலா?**
*—புலவர் சொ. சிங்காரவேலன்* ௧௯௧

**கலைமன்றத்தில் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி** ௪௯௭

**கழக ஆட்சிக்குழு உறுப்பினர்**
**கோவைத் திரு. சு. நடராச பிள்ளை மறைவு** ௬௧

**கழகப் பெரும்புலவரின் பேரா இயற்கை** ௪௪௬

**காஞ்சி மணிமொழியார் மறைவு** ௫௯௨-]

**சங்க இலக்கியத்தில் அன்னம்**
*—பி. எல். சாமி* B.Sc. ௧௬௬

**சங்க இலக்கியத்தில் எருவையும் பாறும்**
*—பி. எல். சாமி* ௬௫௧

**சங்க இலக்கியத்தில் கருங்கால் வெண்குருகும், வெள்ளாங்குருகும் சிறு வெள்ளாங் குருகும்**
*—பி. எல். சாமி* ௧௩௧

**சங்க இலக்கியத்தில் கூகையும் குராலும், குடிஞையும், ஊமனும் ஆண்டலையும்**
*—பி. எல். சாமி* ௪௦௨, ௪௯௫, ௫௧௫, ௫௭௭

**சங்க இலக்கியத்தில் நாரையும் கொக்கும்**
*—பி. எல். சாமி* ௩௫௧

**சங்க இலக்கியத்தில் மயில்**
*—பி. எல். சாமி* ௯௦௩

**சங்க இலக்கியத்தில் யானையங் குருகு**
*—பி. எல். சாமி* ௧௯

**சங்கம்**
*—நெல்லை க. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.டி.* ௯௭

**சிலப்பதிகார ஆய்வுரை**
*—மயிலை சீனி வேங்கடசாமி* ௮௫

**சிலப்பதிகாரம் என்பதின் பொருள் யாது?**
*—டாக்டர் துரை சிங்காரவேலன்* ௧௭௪

செய்திகளும் குறிப்புகளும் ௬௩, ௧௧௨-௬, ௧௭௫, ௨௨௫, ௩௨௦-4, ௩௮௧, ௪௪௬, ௪௯௬-6, ௫௪௪-7, ௫௯௨-7, ௬௪௦-3

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை
நடத்திய முதல் பொதுநிலை பத்து நாள் கருத்தரங்கு
—டாக்டர் ந. சஞ்சீவி ௩௭௪

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
— தாமரைச்செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு ௬௯௨

சென்னைப் பல்கலைக்கழக முதல் அனைத்திந்தியத்
திருக்குறள் ஆராய்ச்சிக் கருத்தரங்கு ௫௯௨-5

சைவப்பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை மறைவு ௬௪௦-2

சொல் ஆராய்ச்சி
—மயிலை சீனி வேங்கடசாமி ௫௨௩

சோதிடகலாநிதி சித்திரகவி அப்துல்கபூர் சாகிபு மறைவு ௬௦

சோவியத்துப் பதிப்பகங்கள்
—சு. ந. சொக்கலிங்கம், எம்.ஏ. ௬௮௦

டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் வாழ்க! ௩௭௭

தணிகைமணி டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை
திருமுறைப் பரிசு இரண்டாம் விழா ௫௩௨

தணிகைமணி டாக்டர்
வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் மறைவு ௫௭

தமிழகப் பொதுநூலக இயக்குநர்
—திரு. வே. தில்லைநாயகம், எம்.ஏ., எம்.எல்.எஸ். ௬௯௩

தமிழாசிரியர் பெருமக்களுக்கு 52 ஆண்டுகளுக்குமேல்
பதிப்புத்துறையில் பணியாற்றிப் பட்டறிவு பெற்ற
கழக ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளை
அன்போடு விரும்பித் தெரிவிப்பது ௫௪௪-1

தமிழில் இணையமைப்பு வாக்கியங்கள்
—டாக்டர் கி. கருணாகரன், எம்.ஏ., பி.எச்டி. ௫௭௧

தமிழில் ஏவல்வினையமைப்பு
—திருமதி க. புட்பவல்லி, எம்.ஏ. ௬௮௮

தமிழில் "தொழிற் பெயர்"
—டாக்டர் கி. கருணாகரன், எம்.ஏ., பி எச்டி. ௪௧௭

தமிழ் ஒலிகளின் சிறப்பியல்புகள்
—டாக்டர் கி. கருணாகரன், ௩௬

தமிழ்நாட்டில் தமிழ்த் தெய்வங்கட்குத்
தமிழில் அர்ச்சனை செய்வதற்கு எதிர்ப்பு ௧௧௨

தமிழ்மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணரின் தமிழ் வரலாறு ௫௩௮

தமிழ்மொழி வரலாறு
—சு. சக்திவேல், M.A., M.A. ௪௨௪

தனித்தமிழ் வித்துவான் தேர்வு வந்த வரலாறு ௧௭௨

தாமரைச்செல்வர் ம. பொ. சி. வாழ்க! ௨௭௮

தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் மணிவிழா ௫௪௪-4

திரு. தி. நா. சுப்பிரமணியம் மறைவு ௩௮0

திருப்பனந்தாள் ஆதீனத்தலைவரின் பேராவியற்கை ௫௯௨-2

திருமணம் செல்வக்கேசவராய முதலியார் எம்.ஏ., கடிதம் ௧௩௬

திருமுறைக் குறிப்பு
—திருக்குறள் பீடம் அழகரடிகள் ௪௩௫

திருவள்ளுவர் 2003 ஆம் ஆண்டுவிழா ௩௭௬

தென்னிந்திய தமிழ்ச்சங்கம்,
திருநெல்வேலித் தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு ௬௪0-1

நம் செல்வியின் புத்தாண்டு ௧

நீதியின் வெற்றி ௨௨௫

படந்தொகுத்தலிற் பட்டறிவு ௫௪௫, ௫௬௩, ௬௪௬

பதிப்புத்துறையிற் பட்டறிவு ௪௨, ௬௫, ௧௧௧, ௧௭௭, ௩௮௫

பத்துப்பாட்டு – பாவலர் - புரவலர்
—வீ. ப. கா. சுந்தரம், M.A. ௪௩௭

பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கிறித்துவக் கம்பர்
திரு. என்றி ஆல்பிரட் கிருஷ்ண பிள்ளை
—வீ. ஞானசிகாமணி, பி.ஏ. ௪௬, ௧௬௫

பள்ளிக் கல்வி இயக்குநரின் சுற்றறிக்கை ௯௮௪

புறத்துறைகட்குக் கிடைத்த புதுச் சான்றுகள்
—*புலவர் இரா. இளங்குமரன்* ௩௬௪

பெருங்குருகும் பெருநாரையும்
—*பி. எல். சாமி*, B.Sc. ௭௬

பெருமழைப்புலவர்
பொ. வே. சோமசுந்தரனுருக்கு அஞ்சலி ௩௮௦

பேச்சுத்தமிழில் 'ஆக்கப் பெயர்கள்'
—*டாக்டர் கி. கருணாகரன்*
&
*டாக்டர் இராம. சுந்தரம்* ௧௦௩

பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை மறைவு ௫௬

பேருரையாசிரியர் பெருமழைப்புலவர் மறைவு ௩௨௦-1

பொருளும் பொருந்தா உரையும்
—*வித்துவான் செக. சீனிவாசன்* ௬௨௨

போர்நிலைபற்றி வானொலியில் கலைஞர் முழக்கம் ௨௨௩

போர் வெற்றிமுரசுக் கவிதைகள் ௨௩௩-௩௨௦

மணிவிழாக்காணும் நாடகக் கலைஞர்
—*தி. க. சண்முகம், எம்.எல் சி. அவர்கள்* ௪௮௫

மதிப்புரை ௬௪, ௧௧௨-d, ௩௮௪, ௫௪௪-6, ௬௪0-7

மருத்துவ ஞாயிறு பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் மறைவு ௬௪0-2

மறைமலையடிகள் தமது இளமைக் காலத்தில்
டாக்டர் சாமிநாதையரவர்கட்கு எழுதிய கடிதம்

மறைமலையடிகள் நூல்நிலையத்தில் மலர்கள் தொகுப்பு ௪௬௯

மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு
அமைச்சர் க. இராசாராம் வருகை ௬௬௫

மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு நூல்கள் அன்பளிப்பு ௪௬௪

மறைமலையடிகள் 20 ஆம் நினைவு விழாவும்
பொதுநிலைக் கழக விழாவும் ௫௯

மாநாய்கனும் மாசாத்துவானும்
—மயிலை சீனி வேங்கடசாமி ௧௭

முசுகுந்த சோழர் வரலாறு
—வை, தட்சிணாமூர்த்தி, எம்.ஏ. ௨0௭

முதுபெரும்புலவர், கவியரசு
திரு. கு. நடேச கவுண்டர் பெரும்பிரிவு ௩௯௨

முப்பெரும் புலவர்கள் நினைவுவிழா ௪௫௯

யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை
—க. ப. அறவாணன், எம்.ஏ , பி.ஓ.எல். ௬௨௬

வள்ளலார் திருவருள் மண்டபத் திறப்பு விழாவும்
“ திருவருட்பாப் பெருந்திரட்டு ”
நூல் வெளியீட்டு விழாவும் ௪௮௭

வடக்கும் தெற்கும்
—குலசை சித்தாந்தச் செல்வர்—வீ. குமாரவேலு ௯௮௪

வாகீச கலாநிதி கி. வா ஜகந்நாதனும் ‘பத்மஸ்ரீ’யும் ௩௯௨-4

வாழ்க தமிழவேள் ௧௭௪

வெற்றிமுரசொலி
—துந்துபி ௨௨௯

# படங்கள்


பக்கம்

**மறைமலையடிகள் 20 ஆம் நினைவு விழா** ௫௬-௫௭

(1) மாண்புமிகு கல்வியமைச்சரவர்கட்குக் காட்சிப் பொருள்களையும் படங்களையும் பற்றிக் கழக ஆட்சியாளர் விளக்கிக் கூறுதல்.

(2) மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையுரை ஆற்றுதல்.

(3) திரு. மா. சண்முகசுப்பிரமணியம், கல்வியமைச்சர் நாவலர், பேராசிரியர் பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் முன்பு கழக ஆட்சியாளர் வரவேற்புரை நிகழ்த்துதல்.

(4) திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் அடிகளார் படத்தைத் திறந்து வைத்தல்.

**திருநெல்வேலி, குமரகுருபரர் குழந்தைப்பள்ளி நான்காவது ஆண்டு விழா** ௧௭௭

(1) திரு. பி. பத்மநாபன், எம்.எல்,ஏ. அவர்கள் தலைமையில் திரு. கா. வ முத்தையா பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல்.

(2) பள்ளிக் குழந்தைகள் கிளர்ச்சியுடன் நடித்துக் களிப்பூட்டுகின்றனர்.

**சென்னை பல்கலைக் கழகப் 'பல்கலைப் பழந்தமிழ்' கருத்தரங்கு** ௯௭௬

(1) டாக்டர் வ. செ, குழந்தைசாமி சொற்பொழிவாற்றுதல்

(2) திரு. மா. சண்முகசுப்பிரமணியம் ஆய்வுரை ஆற்றுதல்


## போர் வெற்றி முரசு மலர்ப்படங்கள்


1. நேருவும் இந்திராவும் 3
2. பாரதரத்ன மாண்புமிகு இந்திராகாந்தி 5
3. சேக் முசிபுர் ரகுமான் 6
4. இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, 7
5. முப்படைத் தலைவர்கள்: மானெக்ஷா, நந்தா, லால் 8
6. பாதுகாப்புத்துறை அமைச்சர் மாண்புமிகு ஜகஜீவன்ராம் ௨௦௧
7. வெளிநாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு சுவரண்சிங் ,,

8. இந்திய-ருசிய அமைதி உடன்படிக்கையில் இருநாட்டு வெளிநாட்டுத்துறை அமைச்சர்கள் ஒப்பமிடல் உருள
9. பாக். படையெடுப்பை எதிர்த்துச் சென்னையில் மகளிர் பேரணி உருள
10. முன்னேறும் இந்தியத் தரைப்படை மறவர்கள் உருள
11. இந்திய வான் படைகள் ,,
12. பாக். சேனைத்தலைவர் நியாசி சரண் ஆவணத்தில் ஒப்பமிடுதல் உருள
13. தமிழக நன்கொடையை முதல்வர் கலைஞர் கருணாநிதி இந்திராகாந்தியாரிடம் ஒப்புவித்தல். உருள்

**டாக்டர் நாவலருக்குப் பாராட்டு விழா** நடஅரு

(1) சென்னை மாநகர்த் தமிழாசிரியர்கள் டாக்டர் நாவலருக்கு நூற்பேழையினை அன்பளிப்பாக வழங்குதல்

(2) கந்தசாமிக் கல்லூரி முதல்வர் ம.கி. தசரதன், டாக்டர் நாவலரிடம் நூற்பேழையின் திறவுகோலை அளித்தல்.

**முப்பெரும் புலவர் விழா** ௪௪௦-௪௪௧

**(1) நெல்லை :**

பேராசிரியர்கள் இரா. பொன்னரசு, பெ. தியாகராசன், பொறியர் வீ. சுந்தரவரதன், புலவர் சிவசம்பு, கழக ஆட்சியாளர், நெல்லை மாவட்டக் கோட்ட ஆட்சித் தலைவர் திரு. சே. மா. கந்தசாமி, பேராசிரியர் பொ. முத்தரசு.

**(3) மதுரை :**

தமிழவேள். பொ. தி. இராசன், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, டாக்டர். சி இலக்குவனார், வி. முத்துக் கிருட்டிணன், பாவலர் வீ. ப. கா. சுந்தரம், எம்.ஏ., கழக ஆட்சியாளர்.

**(3) திருச்சி :**

கழக ஆட்சியாளர், திருவாட்டி விருத்தாம்பாள் சிவப் பிரகாசம், சா பெரியசாமி, பொ. துரைசாமி, ஊரன் அடிகள், ரம்போலா மாஸ்கரேனஸ், செ. பாலசுப்பிர மணியம்.

**திருவள்ளுவர் 2003 ஆம் ஆண்டுவிழா** நடஎசு

(1) தாமரைச் செல்வர் தி. க, சண்முகம் வ உ. சி படத்தைத் திறந்துவைத்தல்.

**தமிழகக் கல்வி அமைச்சர், நாவலர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு மதுரைப் பல்கலைகழகம் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.** ௩௭௭

**வள்ளலார் திருவருள் மண்டபத் திறப்பு விழா** ௪௪௬

1. *வள்ளலார் திருவருள் மண்டபம்*
2. *டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் வள்ளலார் திருவருள் மண்டபத்தைத் திறந்துவைத்தல்*
3. *டாக்டர் பா. நடராசன் திருவருட்பாப் பெருந்திரட்டு நூலை வெளியிட்டு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியனிடம் வழங்குதல்.*

**கழகப் புலமையாளர், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாதபிள்ளை அவர்கள்** ௪௪௬

**மறைமலையடிகள் கலை மன்றத்தில் கலைஞர்** ௪௬௭

1. *கலைஞர் அவர்களைக் கழக ஆட்சியாளர் கலை மன்றத்துள் அழைத்துச் செல்லுதல்.*
2. *இந்தி எதிர்ப்பின்போது கலைஞர் ஏந்திச் சென்ற தமிழ்க் கொடியினைக் கலைஞர் கண்டு மகிழ்தல்.*
3. *அமைச்சர் சாதிக்பாட்சா. திரு செ கந்தப்பன். ஆகியோருடன் 'இந்தி எதிர்ப்பு இயக்கம்' பற்றிய அறிக்கைகளைக் கலைஞர் பார்வையிடல்.*
4. *1937 அக்டோபரில் நெல்லையில் அறிஞர் அண்ணு இந்தி எதிர்ப்புப்பற்றிப் பேசிய கூட்ட அறிக்கைகளைப் படித்தல்.*

**தணிகைமணி திருமுறைப் பரிசு இரண்டாவது சொற்பொழிவு விழா** ௫௩௬

(1) *கோவைக் கவியரசு கு. நடேச கவுண்டர் அவர்கள் சொற்பொழிவாற்றுதல்.*

(2) *பள்ளிக்கல்வி இயக்குநர் சை. வே சிட்டிபாபு அவர்கள் சொற்பொழிவு நூலை வெளியிட்டுப் பாராட்டுதல்.*

**தஞ்சைத் திருநகரில் மாமன்னன் இராசராச சோழன் சிலைத் திறப்புவிழா** ௫௩௭

1. *கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் தலைமையில் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மாமன்னன் இராசராச சோழன் சிலையைத் திறந்து வைக்கிறார்*

**அருட்டிரு அருள்நந்தித் தம்பிரான் அடிகள்** ௫௪௫

**சிந்துவெளி நாகரிகத் தொடர்ச்சி** சுருடன

1. *கச் அருகிலுள்ள பூஞ்ச் பகுதியில் சிந்துவெளி நாகரிகத்திற்கடுத்த நாகரிகத்தைக் காட்டும் பகுதிகள்.*
2. *பூஞ்ச் பகுதியில் கண்டெடுக்கப் பெற்ற முத்திரைகள்.*

**மறைமலையடிகள் நூல் நிலையம்** சுகஞ

*தமிழகச் சுற்றுலா அமைச்சர் மாண்புமிகு க. இராசாராம் அவர்கள் நூற்காட்சியைப் பார்வையிடல் திரு. தி. வி சாம்பசிவம்பிள்ளையவர்களின் தமிழ்— ஆங்கில மருத்துவ அகராதியைக் கழக ஆட்சியாளர் விரித்துக்காட்டுதல்.*

———

# செந்தமிழ்ச் செல்வி

## திங்கள் வெளியீடு

| சிலம்பு ௪௬ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௨, ஆவணி<br>செப்டம்பர் 1971 | பரல் ௧ |
|---|---|---|


## நம் செல்வியின் புத்தாண்டு

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கக் கடந்த ௪௫ ஆண்டுகளாக அரும்பணியாற்றி வந்த நம் செந்தமிழ்ச் செல்வி, இன்று ௪௬ ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது.

நுண்மாண் நுழைபுல மிக்க அறிஞர் பெருமக்களின் சீரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றோடு, நாடு, மொழி, இனம் ஆகிய துறைகளில் தேவையானபோது தேவையான கருத்துக்களை வழங்கியும், சிவநெறிச் செல்வர்களின் சமயக் கட்டுரைகளைத் தாங்கியும் பல கருத்துடையோர்க்கும் பயன்படும் வகையில் பணியாற்றி வந்துள்ளது நம் செல்வி.

சுருங்கச் சொல்ல வேண்டுமானல் செந்தமிழ்ச் செல்வி கருத்து மிக்க ஒரு கலைக் களஞ்சியமாக விளங்கி வருகிறது எனலாம். படித்து முடித்ததும் எடுத்துப் புறத்தே வீசப்படும் இதழ்களைப் போலன்றிப் படித்துப் போற்றிப் பாதுகாத்துக் கட்டடம் செய்து கற்றறிந்தார் இல்லங்களிலும், நூலகங் களிலும் கண்காணிப்போடு வைத்து, அவ்வப்போது புரட்டிப் பார்க்கத் தக்க பார்வை நூலாகத் (Reference Book) திகழும் தீந்தமிழ்த் திங்கள் ஏடு நம் செந்தமிழ்ச் செல்வியாகும்.

மேலும் நம் செல்வி வெறும் பொழுது போக்குக்குப் பயன் படும் இதழாக இல்லாமல், ஒரு சில குறிக்கோள்களின் அடிப் படையில் நடத்தப் படுவதாகும். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, மறைத்திரு மறைமலை யடிகள், பேராசிரியர் கா. சு. பிள்ளை ஆகியோர் நாடு—மொழி—இனம் வாழக் கடைப்பிடித்த உறுதியான நல்ல

கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்துடன் நடைபெற்று வரும் தனித்தமிழ் இதழாகும்.

மொழிநூல் அறிஞர் தேவநேயப் பாவாணர், அறிவியல் அறிஞர் திரு. பி. எல். சாமி, சட்டத்துறை அறிஞர் மா. சண்முகசுப்பிரமணியனார், சைவமும் தமிழும் தழைக்கப் பாடுபடும் பிற தமிழறிஞர்கள் ஆகியோரின் கருத்தோவியங்களைத் தாங்கித் திங்கள் தோறும் தளராது தயங்காது சில இதழ்கள்போல் இரு திங்கட் செய்திகளை ஒரு திங்களிதழில் அடக்காமல் முறையாகக் குறித்த நாளில் குறித்தபடி வெளிவருவது நம் செல்வி.

இவை அனைத்துக்கும் மேலாகத் தமிழ் காக்கும் பணியில் மற்ற எந்த இதழுக்கும் இல்லாத சிறப்பு நம் செல்விக்கு உண்டு என்பதை நாம் சொல்லாமலேயே நாடு நன்கறியும். பிறமொழி ஆக்கத்தால் தலையிட்டால் நம் செந்தமிழ்க்கு இடர் நேரும் போதெல்லாம் சீறி எழுந்து போராடி வரும் இதழ் நம் செந்தமிழ்ச் செல்வியே யாகும்.

இதற்கோர் எடுத்துக் காட்டு வேண்டுமெனில் தமிழகத்தில் இந்தி கட்டாயமாகப் புகுத்தப்பட்ட வேளைகளிலெல்லாம் அதனை எதிர்த்து, இந்தியால் தமிழ் எங்ஙனம் கெடும் என்பதை விளக்கி வந்தமையே போதிய சான்றாகும்.

தமிழ்நாடு — தமிழ்மொழி— தமிழினம் தொடர்பான இன்றியமையாச் செய்திகளைத் தவறாது வெளியிட்டு வருவதால், இஃதொரு வரலாற்றுக் குறிப்பேடு போல் அமைந்துள்ளமை அன்பர்கள் கவனிக்கத்தக்கதாகும்.

தமிழ்மொழியின் ஆக்கங் கருதிச் செயல்படும் எந்த அரசுக்கும் நம் செல்வி துணை நிற்கும் என்பதைத் தொடர்பாக இதனைப் படித்து வருவோர் அறிவர். அவ்வகையிலேயே தற்போது நிலவிவரும் தமிழக அரசுக்கும் ஆக்கமளித்து வருகிறது நம் செல்வி.

கடந்த ஆண்டில் நடைபெற்ற கழகப் பொன் விழா ஈண்டுக் குறிப்பிடத் தக்கதொரு செய்தியாகும். கழகத்தின் ஐம்பதாண்டுத் தமிழ்ப் பணியினைப் பாரறியச் செய்தது அவ் விழா. அவ்விழாத் தொடர்பாகச் சீரியதொரு செந்தமிழ்ப் பொன்விழா மலர் வெளியிடப்பெற்றதையும் கழகப் பணியினைப் பாராட்டி அறிஞர்கள் வெளியிட்ட கருத்துக்களையும் செந்தமிழ்ச் செல்வியிற் காணலாம்.

**ஆதரவு தாரீர் :**

தொடங்கிய காலத்தில் செல்விக்கு 1200 கையொப்பங்கள் இருந்தன. பள்ளிகளும், கல்லூரிகளும் நூலகங்களும் பன் மடங்கு பெருகியுள்ள இக்காலத்தில் 600 கையொப்பங்களே உள் ளன என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியதாகிறது. எனினும் தமிழ்நலங்கருதிப் பல இடர்ப்பாடுகளுக்கிடையே அது நடைபெறவேண்டியுள்ளது. எனவே, இதனைத் தொடர்ந்து வளர்த்து வரும் பொறுப்பு தமிழ் அன்பர்களுடையது, சிறப் பாகத் தமிழாசிரியர்களின் கடமையாகும். தமிழாசிரியர்கள் மனம் வைத்தால் ஆகாத தொன்றில்லை. எனவே, அவர்கள் இவ்விதழினைத் தொடர்ந்து தமக்கு வாங்கியும், பள்ளிகட்கு வாங்குவித்தும் மாணவருலகை வாங்கிப் படிக்கச் செய்தும் இதன் வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம். மற்றும் தமிழ்ப்பற்றுடைய அறிஞர்களும், கல்லூரி, பள்ளித் தலைவர்களும் செல்வியின் உறுப்பினராய்ச் சேர்ந்து உறுதுணை புரிதல் வேண்டும். இயலுமேல் ரூ. 100 செலுத்தி ஆயுள் உறுப்பினராதல் சாலச் சிறந்தது. அத் தொகையினை நான்கு தவணைகளிலுஞ் செலுத்தலாம். இங்ஙனம் அன்பர்கள் தரும் ஆதரவினாலேயே செல்வி தொடர்ந்து அதன் தொண்டினைச் செய்ய இயலும். எதற்கும் ஆதரவு தேவை.

*"ஆதர வுடையான் செய்யும் அல்லவும் நல்ல வாகும்*
*ஆதர விலாதான் செய்யும் நல்லவும் அல்ல வாகும்"*

என்பதைத் தமிழறிந்தோர் நன்கு அறிவர்.

இதுகாறும் செல்வியின் உறுப்பினராய்ச் சேர்ந்து உதவி யோர்க்கும், அரிய கட்டுரைகளை வழங்கி உதவிய அறிஞர் கட்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வ தோடு தொடர்ந்து அத்தகைய ஆதரவினை நல்கி அருளுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம். வாழ்க தமிழ்! வளர்க செந்தமிழ்ச் செல்வி !

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு."*

---

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

(ஞா. தேவநேயன்)

## சுல்[4] (துளைத்தற் கருத்து வேர்ச்சொல்)

**சுல்:** சுல்—சூல். சூலுதல் = 1. தோண்டுதல்.

"நுங்கு சூன்றிட்டன்ன கண்ணீர்மை" (நாலடி. 44). 2. அறுத்தல் (யாழ்ப்.).

அறுத்தலும் ஒருவகைத் துளைத்தலே. கத்தியால் நீட்டுப் போக்காகப் பன்முறை முன்னும் பின்னும் இழுத்துத் துளைத்தல் அறுத்தலும், செங்குத்தாக ஒரே அறையில் துளைத்துத் துணித்தல் அல்லது சிறிது துளைத்தல் வெட்டுதலும், ஆகும்.

சுல்—(சுன்) — சுனை = 1. உட்டுளையினின்று நீர் வருவது போன்ற நீரூற்று. 2. நீரூற்றுள்ள மலைக் குண்டு.

*"வான்கணற்றவன் மலையே வானத்து*
*மீன்கணற்றதன் சுனையே"* (புறம். 109)

3. நீரூற்றுள்ள பொய்கை (பிங்.).

சுனை—தெ. சொன, க. தொன. சுன்—சூன் = இரு வீட்டுச் சுவர்களின் இடைச்சந்து.

சுனை-(சொனை)—சோனை = 1. வானத்தினின்று நீரூற்றுச் சொரிவது போன்ற விடாப் பெரும் பெயல். "மேகஞ் சோனை பட" (கம்பரா. அயோத்தி. குகப். 20). 2. (சோனையாகப் பொழியும்) கார் முகில். "சோனைவார் குழலினுர்" (கம்பரா. ப்ால. நீர்விளை. 14). 3. மலையடிவார விடாமழைச் சாரல்.

தெ. சோன, க. சோனெ.

சோனைமாரி—சோனுமாரி—சோனுவாரி = விடாப் பெரு மழை. 'சோனுமாரியாய்ச் சொரிகிறதே' என்பது உலகவழக்கு. "சோனை மாரியிற் சொரிந்தனன்" (கம்பரா. யுத்த. பிரமாத். 59).

சோனை—சோனம் = முகில். "சோனந்தரு குழலார்" (பதிஞெ. ஆளு. மும். 12). தெ. சோன, க. சோனெ.

சோனை மேகம் = பெருமழை முகில். "சொரிந்தது சோனை மேகம்" (பாரத. சம்பவ. 79).

சோனைமேகம் — சோணமேகம். "சோணமேகம் பொழி வதுபோல்" (பாரத. பதினேழாம். 135).

சுல் — (சுர்) — சுர. சுரத்தல் = 1. உட்டுளையினின்று ஊறுதல் போற் பால் சுரத்தல். 2. பால் சுரத்தல் போல் மழை பொழிதல்.

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்" (சிலப். 1 : 9)

3. மழை பொழிதல் போல் இறைவன் அருள்பொழிதல். "ஆழியா னவனை நோக்கி யருள்சுரந்து" (கம்பரா. யுத்த. விபீடண. 142).

4. மிகக் கொடுத்தல். "நெடுந்தேர் களிறொடு சுரக்கும்" (அகம். 249). 5. (மிகக் கொடுத்தலால்) நிறைதல். "விருப்பஞ் சுரந்த சிலந்தி முடிசூட்டும் பெருமான்" (திருவானை. உலா. 60). 6. உடம்பில் நோய்நீர் பெருகி வீங்குதல்.

சுர — ம. சுரத்து, க. ஒசர்.

சுர — சுரப்பு = 1. ஊறுகை. "சுரப்புறு சிறைப் புனல்" (அரிச். பு. விவாக. 107). 2. ஊற்று. 3. கறக்குமாறு ஆவின் மடியிற் பாலூறுகை, 'ஒரு சுரப்பு ஆகிவிட்டது.' (உ. வ.). 4. கெட்ட நீரால் ஏற்பட்ட வீக்கம். 'காலிற் சுரப்பு உண்டா யிருக்கிறது.' (உ. வ.).

சுரப்பு — சுரப்பி = நன்றாக அல்லது நிரம்பப் பால் சுரக்கும் ஆ(வு).

ஒ. நோ : கறவை = கறப்பு, கறக்கும் ஆவு. சுரை = சுரப்பு, சுரக்கும் ஆவு.

சுரப்பி — வ. சுரபி (Surabhi). வடமொழியில் சுரபி என்னுஞ் சொற்கு மூலமில்லை. சு - ரப் (Su-rabh) = Pleasantly affecting என்று மானியர் வில்லியம்சு சமற்கிருத—ஆங்கில அகர முதலி உன்னிப்பாகக் கூறும்.

சுர — சுரம் = உட்டுளை.

சுர—சுரங்கு—சுரங்கம் = 1. நிலவறை. 2. கீழறுக்கும் அறை. 3. திருடர் கன்னமிடச் சுவரில் துளைக்கும் துளை. 4. பாறைகளை உடைக்க வெடிமருந்து வைக்கும் குழி.

சுரங்கம் — சுரங்கா. (வ.).

சுர்—சுரி. சுரித்தல் = துளையிடுதல்.

சுரி = 1. துளை. (திவா.). 2. ஏட்டுத்துளை. ம. சுரி. 3. ஏட்டில் துளையிடுங் கருவி.

சுரியூசி = ஏட்டில் துளையிடுங் கருவி.

இச்சொல் முந்தின குத்தற் பொருட் கட்டுரையிலும் குறிக்கப்பட்டது. குத்தலும் துளைத்தலும், கலத்தை நீர்மேல் வைத்தலும் அதற்குள் முழுக்குதலும் போன்ற, நெருங்கிய அல்லது அடுத்து நிகழும் வினைகள் என்றறிதல் வேண்டும். அதனால், ஒரே சொல் இரண்டையுங் குறிக்கும். ஆயினும், கருவி வேறுபாட்டால் வினை வேறுபடும். கையினால் முதுகிற் குத்துவது தொடுதலின் பாற்பட்டது; கத்தியினால் அதில் அல்லது வேறுறுப்பிற் குத்துவது துளைத்தலின் பாற்பட்டது. ஆதலால், துளைக்குங் குத்தல் வினைச் சொற்களெல்லாம் இக் கட்டுரைக்கே யுரியவை யெனப் பிரித்துணர்க. குடைச்சற் கருத்தைக் கொண்ட சூலைநோய்ப் பெயரும், அணிவகைத் துளைத்தலைக் குறித்தலால் இக் கட்டுரைக்கே யுரியதாகும்.

சுர்—சுரு—சுருங்கு = சாய்கடை (Gutter) (பிங்.).

சுருங்கு—வ. சுருங்கா.

சுருங்கு—சுருங்கை = 1. நுழைவாயில். (பிங்.). 2. மாளிகையின் சாளரம். "மாடமேற் சுருங்கையிலிருந்து............ மாநகரணி பார்த்திடும்" (சீகாளத். பு. நக்கீர. 30). 3. புதை சாலகம். "பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி" (மணி. 12 : 79). 4. கோட்டையில் மறைவான கீழ்நில வழி. (சூடா). "போக வமைத்த பொய்ந்நிலச் சுருங்கையுள்" (பெருங். 2 : 17 : 94).

சுருங்கை — வ. சுருங்கா.

ஒ. நோ : Gk. Surigx, Surigg = குழாய். L., E. Sgrinx = தாணற்குழல். L. Siringa, E. Syringe = உறிஞ்சி (உறிஞ்சு குழாய்).

சுரு—சுருவம்=1. அகப்பை வகை (அக. நி.). 2. நெய்த் துடுப்பு. "சீரைச் சுருக்குச் சுருவமெலாம்" (உத்தரரா. அனுமப். 41).

சுருவம்—வ. ஸ்ருவ.

சுரு—சுருவை=நெய்த் துடுப்பு. "அந்தணாளர்க்குச் சுருவையும்" (தொல். பொ. 629, உரை).

ஒ. நோ: முள்—முழு—முழுகு. முழு—மூழை=அகப்பை. முழுகுதலும் துளைத்தல் வகையே.

சுர—சுரை=1. குழிந்த இடம். "பாத்திரத் தகன் சுரைப் பெய்த வாருயிர் மருந்து" (மணி. 11 : 117). 2. உட்டுளை. (பிங்.). 3. மூங்கிற் குழாய். "அகன்சூ லஞ்சுரைப் பெய்த வல்சியர்" (அகம். 113). 4. திரிக்குழாய். "சொரிசுரை கவரு நெய்" (பதிற்றுப். 47). 5. திருகாணியைச் செலுத்துஞ் சிறு குழாய். 6. மூட்டுவாய். "சுரையம்பு மூழ்க." (கலித். 6). 7. பூண். "செறிசுரை வெள்வேல்" (அகம். 216). 8. தோண்டும் கூரான பாரைவகை. "உளிவாய்ச் சுரையின் மிளிர மண்டி" (பெரும்பாண். 92). 9. நெற்றுனபின் உட்டுளையுள்ள காய்வகை. "சுரைவித்துப் போலுந்தம் பல்" (நாலடி. 315). ம. சுர, க. சொரெ. 10. நுண்ணிய துளையினின்று சுரக்கை. "கடுஞ்சுரை நல்லான்" (குறுந் 132). க. சொரெ. 11. மான் மரை மறி ஆன் முதலியவற்றின் பான்மடி. "வருடை மான்மறி சுரைபொழி தீம்பால்" (குறுந். 187). 12. கறக்கும் ஆ. (திவா.). "சுரைமலி யமிர்தத் தீம்பால்" (சூளா. தூது. 90).

சுள்—சுளி—(சுகி)—சுகிர். சுகிர்தல்=1. கிழித்தல். "பல்லினுற் சுகிர்ந்த நாரின்" (சீவக. 438). 2. மயிர், நார் முதலியவற்றை வகிர்தல். சுகிர்=உட்டுளை. (சூடா.).

சுர்—(சூர்)—சூறு=எருவாய் (Anus). சூறு—சூற்று—சூத்து=1. எருவாய் (மலவாயில்). 2. புட்டம். "சூத்திலடித் தாலும், பல்லுப் போச்சாம்." (பழமொழி).

ம. சூத்து. வ. சுத்து (c), சூத்து (c), சுத்தீ (c). வடமொழியில் இதற்கு மூலமில்லை. தமிழில் மூலம் தெளிவாக வுள்ளது. சூறல் (சூலுதல்)=தோண்டுதல். சூறு=துளை, எருவாய்யில். இங்ஙன மிருந்தும், சூத்து என்னும் தென் சொற்குச் சுத்தீ என்னும் வடசொல்லை மூலமென்று தலைகீழாகச்

சென்னைப் ப. க க. த. அகரமுதலி (Lexicon) காட்டியிருப்பது எத்துணைக் குறும்புச் செய்தியாம்!

சூத்தழகி = குரங்குச் சூத்து மாம்பழம்.

சூத்தாங் கரடு = எருவாயின் தடிப்பு.

சூத்தாட்டி = வலியான் என்னும் ஒருவகைக் குருவி.

சூத்தாம்பட்டை = புட்டம்.

சூத்தெரிச்சல் = எருவாய் காந்துதல்.

இடக்கர் வினைச் சொற்களும் வழக்குக்களும் இங்கு விடப்பட்டுள்ளன. இவ்வழக்குக்களுள் ஒன்றேனும் வடமொழியில் இல்லை.

சுல்—சொல்—சொலி. சொலித்தல் = 1. தோண்டுதல். 2. பிளத்தல். 3. உரித்தல். "காம்பு சொலித் தன்ன அறுவை" (சிறுபாண். 236). 4. பெயர்த்தல். "திங்களுகிரிற் சொலிப்பதுபோல்" (சீவக. 350).

சொல்லுதல் = தீர்த்தல். "துணைவனுக் குற்ற துன்பஞ் சொல்லிய தொடங்கினளே." (சீவக. 1146).

சொலி = உரி, தொலி, பட்டை. "கழைபடு சொலியி னிழையணி வாரா" (புறம். 383).

சொல் — சொள் — சொள்ளை = 1. துளை. 'ஒற்றைக் கடுக்கன் சொள்ளை' (உ. வ). 2. உள்ளீடற்ற சொத்தை. 3. பள்ளமான அம்மைத் தழும்பு. 'அம்மைச் சொள்ளை' (உ. வ) 4. குற்றம்.

சொள்—சொள்ளல் = குற்றம்.

சொள்—சொண்டு = சொத்தை மிளகாய்.

சொண்டு—சொட்டு = குற்றம். சொட்டு—சொட்டை = சொத்தை, குற்றம். சொட்டை—சொத்தை = 1. உள்ளீடற்றுக் கறுத்த பழம். 2. புழுத்தகாய். 3. பூச்சியரித்த பல்.

சொத்தை—சூத்தை (கொச்சை வழக்கு).

சொள்—சொளு. சொளு சொளுத்தல்=எளிதாய்த் துளைக்குமாறு கூழ்போற் குழைதல், சேருதல் ஒ. நோ:

நொள்—நொளு. நொளு நொளுத்தல்.

சொளு சொளுவெனல்=நெய் தேன் முதலியன வடிதல், சொள் (சொள்ளு)=சாளைவாயினின்று வடியும் நீர்.

சொளுசொளு—சொலுசொலு. சொலு சொலெனல்= சோறு குழைதல்.

சொளுசொளு—சொதுசொது. சொதுசொது வெனல்= சேறுபோற் குழைந்திருத்தல்.

சொது—சுது—சுதை = சேறு போன்ற சுண்ணும்பு அல்லது சிப்பிச் சாந்து. சுதை—வ. சுதா (Sudha).

> "ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
> வான்சுதை வண்ணங் கொளல்" (குறள். 714)

என்று திருவள்ளுவரும்,

> "வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்து"

என்று சீத்தலைச் சாத்தனுரும் (மணி. 6 : 43), கூறுவதால், சுதை யென்பது தென்சொல்லே.

சுது—சது—சதுப்பு=சேற்றுநிலம்.

சொள்—(சோள்)—சோளி=இரப்போன் பெரும்பை.

து. ஜோலி, இ(ந்தி). ஜோலீ.

சோளி—சோளிகை=இரப்போன் பெரும்பை. "ஒருவன் மாளிகைக் காரனுக இருக்க வேண்டும்; ஒருவன் சோளிகைக் காரனுக இருக்க வேண்டும்." (பழமொழி).

க. ஜோலிகெ, து. ஜோலிகெ, தெ. த்ஜோலிய.

ஒ. நோ: பொள்—பொய்—(பய்)—பை=துளை, துளை யுள்ளது, துளைபோலத் தையல் கொண்டது.

சொள்—(சொர்)—சொருகு. சொருகுதல்=துளைக்குள் இடுதல், உள்ளிடுதல். சொருகு—செருகு.

சொள் — (சொர்) — சொரி. சொரிதல்=உள்ளிருந்து விழுதல், சிந்துதல்.

சொள்—சோள்—சோர். சோர்தல்=1. குழைதல். 2. தளர்தல். "கடியு மிடந்தேற்ருள் சோர்ந்தனள் கை" (கலித். 92 : 50). 3. மனந் தளர்தல். 4. மயக்க மடைதல். "அரசன் சோர்ந்தான்" (கம்பரா. அயோத். தைல. 59) 4. துயர்தல். 5. வாடுதல். "எரியிதழ் சோர்ந்துக" (கலித். 78). 6. மெலிதல். "காம்பேர் தோளி கண்டு சோர்ந்தன்று': (பு. வெ. 11, பெண்பாற். 1, கொளு). 7. தள்ளாடுதல். "கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்" (நாலடி 13). 8. வடிதல். "அயறு சோருமிருஞ் சென்னிய" (புறம். 22 : 7). 9. கழிதல். "மலஞ்சோரு மொன்பது வாயில்" (திருவாச. 1 : 54). 10. கழலுதல். "பைந்தொடி சோரும்" (குறள். 1234) 11. நழுவுதல் "துகிலிறையே சோர்ந்தவாறும்" (திருவாச. 5 : 57). 12. விழுதல். 13. விட்டு நீங்குதல். "சூதரைச் சோர்தலினிது." (இனி. நாற். 24). 14. இறத்தல். "பாலகன்ருன் சோர" (சிலப். 9 : 6).

ம. சோருக, க. சோர், தெ. சோலு.

சோர்—சோர்வு=சொரிகை. வான்சோர் வினிதே" (இனி. நாற். 16).

சோர்—சோரி=சிந்தும் அரத்தம். "ஓசைச் சோரியை நோக்கினன்." (கம்பரா. கிட்கிந். வாலிவதை. 69.). ம. சோரி.

சோரியிளநீர்=செவ்விளநீர். (பதார்த்த. 69). சோரத் தேய்த்தல்=உடம்புள் எண்ணெய் இறங்கத் தேய்த்தல். சோரப் பெய்தல்=பெருமழையாகப் பொழிதல்.

சோரப் போடுதல்=ஆறவிடுதல், தணிய விடுதல். சோரா வொற்றி=மீளா (தளரா) வொற்றி. (நாஞ்சில் நாட்டு வழக்கு).

இவ் வழக்குக்கள், மேற்குறித்த பொருள்களின் நுண் வகைகளான கருத்துக்களைத் தழுவினவாகும்.

# சங்க இலக்கியத்தில் யானையங் குருகு

[பி. எல். சாமி, பி.எஸ்ஸி.,]

மதுரை மாநகரில் விடியற்காலையில் நடந்த நிகழ்ச்சிகள் சிலவற்றை மதுரைக் காஞ்சி கூறுகின்றது.

*"சூதர் வாழ்த்த மாகதர் நுவல*
*வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப*
*விமிழ்முர சிரங்க வேறுமாறு சிலைப்பப்*
*பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப*
*யானையங் குருகின் சேவலொடு காம*
*ரன்னங் கரைய வணிமயி லகவ*
*பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்*
*கூட்டுறை வயமாப் புலியொடு குழும"*

*—மதுரைக் காஞ்சி: 670 - 677 வரி.*

பாண்டிய மன்னனை விடியற்காலையில் சூதர் வாழ்த்துகின்றனர். மாகதர் போற்றுகின்றனர். வேதாளிகர் இசைக்கின்றனர். நாழிகைக் கணக்குக் கூறுவோர் நாழிகையைக் கூவுகின்றனர். பள்ளியெழுச்சி முரசு ஒலிக்கின்றது. ஏறுகள் மாறுபட்டு முழங்குகின்றன. சேவல்கள் விடியற்காலை வந்துவிட்டதெனக் கூவுகின்றன. யானையங் குருகின் சேவலுடன் அன்னச் சேவல்கள் பேடைகளைக் கூப்பிடுகின்றன. மயில்கள் அகவுகின்றன. பெரிய ஆண் யானைகள் பிளிறுகின்றன. கூட்டில் உள்ள வலிய விலங்குகள் புலியுடன் முழங்குகின்றன. விடியற்காலை நிகழ்ச்சிகளாக மதுரைக்காஞ்சி கூறியவையுள் யானையங் குருகு அழைப்பதாகக் கூறியதைக் கவனிக்க வேண்டும். விடியற்காலையில் கோழிச் சேவல் கூவுவது எங்கும் காணக்கூடிய நிகழ்ச்சி. மயில்கள் மதுரை மாநகரில் வளர்க்கப்பட்டதால் மயில்கள் கூவுவதும் எதிர்பார்க்கக் கூடியதே. யானைகள் பிளிறுவதும் அவ்வாறே. அக்காலத்தில் நாட்டின் தலைநகரில் இன்றுபோலக் கூட்டில் விலங்குகளை அடைத்து வைத்துக் காட்சிப் பொருளாகக் காட்டும் வழக்கம் இருந்ததெனக் கருதலாம். வலிய விலங்குகளுடன் கூட்டில் புலி உறுமுவதும் கூறப்பட்டுள்ளது. ஆனால் யானையங் குருகின் சேவலும், அன்னச் சேவலும் அழைப்பதாகக் கூறியதற்கு விளக்கம் தேவையாக உள்ளது. சங்க இலக்கியத்தில் அன்னப்

பறவையைப் பற்றிப் பல பாடல்களில் செய்திகள் வருகின்றன. அந்த அன்னப் பறவைகள் தாரா, வாத்து Ducks and Geese இனங்களைச் சேர்ந்தவை. வடநூலில் இருந்து பிற்கால இலக்கியத்தில் கடன் வாங்கிய அன்னப் பறவையன்று. இந்த வடநூல் அன்னப் பறவை (Swan) இமயமலையில் காணப் படுவது. தமிழ்நாட்டில் இயற்கையில் காணமுடியாதது. யானையங் குருகு என்பது எதுவென்பதை ஆராயவேண்டும். இந்த யானையங் குருகைப்பற்றிக் குறுந்தொகையும், அக நானூறும் கூறும் செய்திகளைக் கவனிப்போம்.

*' முனூஅ தியானையங் குருகின்கானலம் பெருந்தோ*
*டட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம்*
*குட்டுவன் மரந்தை யன்னவெம்''* —குறுந்தொகை - 34.

*''.. ...... ............களிமயில்*
*குஞ்சரக் குரல குருகோடு ஆலும்*
*துஞ்சா முழவின் துய்த்தியல் வாழ்க்கைக்*
*கூழுடைத் தந்தை இடனுடை வரைப்பின்''* —அகம் - 145.

கானலில் பெருங்கூட்டமாக இருந்த யானையங் குருகு மன்னர் ஆர்ப்பிசைக்குப் பயந்ததாகக் குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது. மயில்கள் யானையின் குரல் போன்ற ஓசை செய்யும் குருகோடு ஆடும் இடமுடைய வீட்டில் என்று அகநானூறு கூறுகின்றது. சங்க நூல்களில் யானையங் குருகைப் பற்றி வரும் செய்திகள் பின்வருமாறு: யானையங் குருகின் சேவல் விடியற் காலையில் பேடையைக் கூவி அழைக்கும். கூட்டமாகக் காணப்படும். மயிலோடு யானையங் குருகும் ஆடும். யானையங் குருகிற்குக் குஞ்சரத்தின் குரல் உண்டு. குட்டுவனுடைய மரந்தை நகரிலும் மதுரையிலும் காணப்பட்டது. இச் செய்திகளை வைத்துக்கொண்டு யானையங் குருகு அறிவியற்படி, பறவை நூற்படி எந்தப் பறவை என்று ஆராய வேண்டும். இச் செய்திகளை வைத்துக் கொண்டு ஆராயும் பொழுது நச்சினார்க்கினியர் யானையங் குருகு என்பதற்குக் கூறிய பொருளையும் ஆராய வேண்டும். யானையங் குருகை வண்டாழ்ங் குருகு என்று நச்சினார்க்கினியர் கூறினர். இது திருவோண நட்சத்திரத்திற்குரிய புள்ளரசு என்று சோதிட நூலார் கூறுவர் என்று உ. வே. சாமிநாதையர் சொல்லியுள்ளார். நிகண்டுகளில் இப் பறவையைப் பற்றிப் பிழைபட்ட செய்திகள் வருகின்றன. குறுந்தொகை 34ஆம் பாட்டில் அடிக்குறிப்பாக யானையங் குருகு என்பதற்கு 'யானையுண் குருகு' என்ற பாடம் காட்டப்பெற்றுள்ளது. இது பிழைபட்ட பாடம்

என்று கருதியே உ. வே. சாமிநாதையர் அடிக்குறிப்பில் காட்டினர். மதுரைக் காஞ்சியில் யானையங் குருகென்றே அழைக்கப்படுவதால் குறுந்தொகை ஓலைச்சுவடிகளில் காணப் பெற்ற பாடமாற்றமான 'யானையுண் குருகு' தவருனது. ஆனல் இந்தத் தவருன பாடமாற்றத்தையே சரியான பாடமாகக் கொண்டு சேந்தன் திவாகரமும், பிங்கலந்தையும் பொருள் கூறியுள்ளன. இது நிகண்டுகளிலும் பிழைகள் இருக்கின்றன என்பதைக் காட்டுகின்றது இந்தத் தவருன பாடம் திவாகரம் எழுதப்பெற்ற ஏழாம் நூற்ருண்டிலேயே இருந்தது என்பதைக் கருதும்போது வியப்பாக உள்ளது. ஆனல் இந்தப் பாடம் தவறு என்று கண்டுபிடித்துச் சூடாமணி யாசிரியர் சில நூற்ருண்டுகளுக்குப் பின்னர் திருத்தியது அதைவிட வியப்பானது. சேந்தன் திவாகரம் "யானையுண் குருகு பெருங்குரு காகும்" என்று கூறியுள்ளது. பிங்கலந்தை "யானையுண் குருகு பெருங் குரு கென்ப" என்று கூறியுள்ளது. ஆனல் சூடாமணி நிகண்டு "வெம்பிய நேமிப்புள்ளும் விரும்பு சக்கரவாகப்புட், கொம்பிய கோகம் யானைக் குருகென்று கூறலாமே" என்று கூறியுள்ளது இதில் யானைக்குருகு என்ற சரியான பாடத்தைக் காட்டி யுள்ளது. ஆனல் சூடாமணி நிகண்டு கூறுவதிலும் வேறு பிழையிருக்கின்றது. சேந்தன் திவாகரமும், பிங்கலந்தையும் சக்கரவாகப் புள்ளின் பெயர் நேமிப்புள், சகோரம் என்று தனியே கூறி அடுத்த பறவையாக 'யானையுண் குருகு பெருங் குருகாகும்' என்று கூறின. ஆனல் சூடாமணி நிகண்டு ஆசிரியர் இந்தச் சக்கரவாகப் புள்ளையும் யானையுண் குருகையும் ஒன்ருக்கி யானைக் குருகென்று தவருகக் கூறியுள்ளார். சக்கர வாகப் புள்ளும் யானைக் குருகும் வேறு வேறு பறவைகள் என்பதை எப்படி மறந்து தவருக ஒன்ருகச் சேர்த்துக் கூறினர் என்பது தெரியவில்லை. இத்தகைய பிழைகள் நிகண்டுகளில் பிறவும் உண்டு. பிங்கலந்தையில் கழுகின் பெயர் பவணை, உவணம் என்று சில பெயர்கள் கூறப்பட்டுள்ளன. ஆனல் அதற்கடுத்த சூத்திரத்தில் "மற்றுங் கழுகின் பெயர் பூகமென் பது மப்பெயர் புகலும்" என்று கூறப்பட்டுள்ளது. "மற்றும் கழுகின் பெயர் பூகமென்பது" என்று கூறுவதற்குத் தவருகக் கமுகின் பெயர் பூகமென்பது என்று கூறப்பட்டுள்ளது. மரப் பெயரைப் பறவைப் பெயர்ப்பிரிவில் தவருகக் கூறியிருப்பதைக் காண்கிருேம். இது ஏடெழுதுவோர் கமுகு என்பதை கழுகு என்று எழுதியதால் வந்த பிழையாக இருக்கலாம். யானையுண் குருகைப்பற்றிச் சென்னைப் பல்கலைக் கழக அகராதி ஆனையிருஞ் சிப்புள், ஆனையறையும்புள் என்று கூறி ஆங்கிலக் குறிப்பில் இது ஒரு புராணப் பறவை, யானையை விழுங்கும் பறவை

என்று கூறியுள்ளது. இவையெல்லாம் யானையுண் குருகு என்ற தவறான பாடத்தால் வந்த விளைவு. அதே பல்கலைக் கழக அகராதி யானைக் குருகு என்பதற்குச் சக்கரவாகப் பறவை என்று கூறி ஆங்கிலக் குறிப்பில் நாரையைப் போன்ற பறவை என்று கூறியுள்ளது. நிகண்டுகள் கூறிய செய்திகளிலிருந்து யானை யங் குருகு எதுவென்று கண்டுகொள்வது அரிதாக உள்ளது. பெருங்குருகு யானையங்குருகு என்று கொண்டால் தமிழிலக்கியத்தில் பெருங்குருகு பற்றி ஒரு செய்தியையும் காண முடியவில்லை.

வண்டாழ்ங்குருகு என்று நச்சினார்க்கினியர் கூறியது எந்தப் பறவை என்று ஆராயுங்கால் அது மலையாளத்தில் வரும் "வண்டாரங் கோழியே" என்று தெரிகின்றது. குருகைக் கோழியென்று கூறுவது பிற்கால வழக்கு. வண்டாழ்ங்குருகு வண்டாரங்கோழி ஆயிற்று எனலாம். இந்த வண்டாரங்கோழி என்பது மலையாளத்தில் செம்போத்து என்று கூறுவர். குண்டர்ட் (Gundert) எழுதிய மலையாள அகராதியில் இப் பொருள் கூறப்பட்டுள்ளது. இந்தச் செம்போத்து என்ற பறவைக்குச் சங்க இலக்கியத்தில் யானையங்குருகைப் பற்றிய செய்திகள் மிகவும் ஒத்து வருகின்றன. செம்போத்துகள் விடியற் காலையில் கூவும் குணமுடையவை. தமிழ்நாட்டில் செம்போத்துகள் கூவுவதைக் கேட்பது அரிது. ஏனென்றால் அவைகளைப் பெரும்பாலும் வேட்டையாடி அழித்து விட்டனர். ஆனால் மலையாளத்தில் இன்னும் சிற்றூர்களிலும் செம்போத்து விடியற்காலையில் "கூஉப், கூஉப்" என்று கூவுவதைக் கேட்கலாம். ஆண் பறவை கூப்பிடுவதையும், பெண் பறவை திருப்பிக் கூப்பிடுவதையும் இன்றும் கேட்கலாம். இது இப்படிக் கூப்பிடுவதின் காரணமாக "ஊப்பன்" என்றழைக்கப் படுகிறது. இப்படி வெகுதூரம் கேட்கும்படி கூப்பிடுவதின் காரணமாகவே "குஞ்சக்குரல்" என்று அகநானூற்றில் கூறப்பட்டதாகத் தெரிகின்றது. யானை குரலிடுவதை "தூம்பு குரல்" என்று சங்க நூல்கள் கூறுவது கவனிக்கத்தக்கது. இந்தச் செம் போத்துப் பறவைகள் இணையாகவும், கூட்டமாகவும் காணப் படுவதுண்டு. வயல்களிலும், மரங்கள் சூழ்ந்த இடங்களிலும் காணப்படும். செம்போத்து ஆடுவதாக மக்கள் கருதி வந்தனர். அதனால் "மயிலாடு மாப்போல செம்போத்து ஆடுமோ" என்ற பழமொழி மலையாளத்தில் வழங்குகின்றது. அகநா னூற்றில் களிமயில் குஞ்சரக் குரல குருகோடு ஆலும் என்று சொல்லியிருப்பது இது சார்பாக நோக்கத் தக்கது. செம் போத்தும், மயிலும் ஆடுவதாகச் சங்க காலத்திலேயே கருதி

வந்தனர். குட்டுவனுடைய மரந்தை நகரிலும், மதுரையிலும் காணப்பட்டதாகக் கூறியுள்ளனர். கேரளத்தில் இன்னும் செம்போத்து நிறையக் காணப்படுகின்றது. நகரிலும், ஊர்களிலும் பழகும் பறவை இது என்று பறவை நூலார் கூறுவர். சங்க இலக்கியத்தில் யானையங்குருகைப்பற்றிக் கூறிய செய்திகளெல்லாம் செம்போத்துக்கு ஒத்து வருவதால் யானையங்குருகு செம்போத்து என்பதே என்று கருத வேண்டும். யானையங்குருகு என்பது யானையைப் போன்ற அதன் பெரிய உருவை ஒப்பிட்டோ, அல்லது யானையை விழுங்குவதைக் குறித்தோ வழங்கினதாகச் சொல்ல முடியாது. அகநானூறே குரலினால் இப்பறவை பெயர்பெற்றதைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். பிற் காலத்தில் இதை உணராது யானையைப் போன்று பறவையில் பெரியது என்று கொண்டு "பெருங்குருகு" என்று பொருள் கொண்டனர். அத்துடன் யானையை விழுங்கும் குருகு என்றும் புராணப் பொருள் கொண்டனர்.

சங்க காலத்தில் யானையங்குருகு என்றழைக்கப்பட்ட செம்போத்து அதற்குச் சிறிது பிற்காலத்தே "குக்கில்" என்றழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

*"கோழியுங் கூவின குக்கில் குரல்காட்டுந்*
*தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ"*

*—யாப்பருங்கலக் காரிகை மேற்கோள்*

*"தெரிகணை எஃகம் திறந்தவாய் எல்லாம்*
*குருதி படிந்துண்ட காகம்—உருவிழந்து*
*குக்கில் புறத்த சிரல்வாய செங்கண்மால்*
*தப்பியார் அட்ட களத்து"*

*—களவழி நாற்பது-5*

குக்கில் என்பதற்குச் செம்போத்து என்று பொருள் கூறப் பட்டுள்ளது. யாப்பருங்கலக் காரிகையில் வரும் மேற்கோள் பாடல் அருகதேவனைப் பற்றிய பாவைப் பாட்டிலிருந்து எடுத் தாளப்பட்டுள்ளது. ஆண்டாள் திருப்பாவையில் வருவது போல விடியற்காலையில் நடக்கும் நிகழ்ச்சிகள் கூறப்பட் டுள்ளன. கோழி கூவுவதையும், குக்கிலாகிய செம்போத்து கூவுவதையும் கூறியுள்ளதைக் காணலாம். மதுரைக் காஞ்சி யில் கோழிச் சேவல் கூவுவதும் யானையங்குருகு கூப்பிடுவதும் கூறப்பட்டதோடு இதையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். குக்கிலின் நிறம், உருவம், களவழி நாற்பதில் அழகாகக் கூறப்பட்

டுள்ளது. செம்போத்து காக்கையைப் போன்று கருமை யாயினும் உடலின் மேற்புறம் சிவந்த செம்பு நிறமாக இருக்கும். அதனல் காக்கையானது இரத்தத்தில் தோய்ந்தது போலக் குக்கில் இருந்ததாக உவமித்துள்ளார். மீன் கொத்தி யின் மூக்கைப்போலக் காக்கையின் மூக்குச் சிவந்திருந்ததாக வும் கூறியுள்ளார். செம்போத்தின் நிறத்தை நன்குணர்ந்தே கூறியுள்ளார். குக்கில் என்ற பெயர் குங்கிலியத்தைக் குறித்தும் வழங்கியுள்ளது. பின்னர் அந்த நிறமுடைய செம்போத்திற்கு வழங்கிற்று. திவாகரம் 'குங்கிலுவும், குக்கி லுவும் குங்கிலிய மாகும்' என்று கூறியிருக்கின்றது. செம் போத்து என்ற பெயர் மயிலைநாதர் உரையில் வருகின்றது. செம்போத்தைத் தற்காலத்தில் செண்பகம், செம்புவாக் காக்கை, கள்ளிக்காக்கை என்று தமிழ்நாட்டில் சில இடங் களில் அழைக்கின்றனர். மலையாள நாட்டில் செம்போத்தின் கூட்டைக் காணல் நல்லது என்ற நம்பிக்கை உள்ளது. அரிய மூலிகைகளைச் சேர்த்துக் கூட்டில் வைத்துள்ளது என்றும் நம்புவர். இதனை வியாழக்கிழமையிலும், ஞாயிற்றுக்கிழமை யிலும் காலையில் காண்பது நல்ல சகுனம் என்றும் கூறுவர். நச்சினர்க்கினியர் காலத்தில் இதற்கு 'வண்டாழ்ங்குருகு' என்ற பெயர் வழங்கியிருக்கலாம். வண்டாழ்ங்குருகின் பெயரால் ஊர்கள் இருந்ததுவும் கவனிக்கத்தக்கது. ஒன்பதாம் நூற் ருண்டைச் சேர்ந்த கருநந்தடக்கண் சாசனத்தில் வண்டாழ்ங் கோடு கூறப்பட்டுள்ளது. சோழமண்டலத்துத் திருநிறையூர் நாட்டைச் சேர்ந்த வண்டுவாஞ்சேரிக் கல்வெட்டில் வண்டாழஞ் சேரி என்று வழங்கியுள்ளது. செம்போத்தைக் குறிக்கும் பழைய பெயர்களை மறந்ததால் நிகண்டாசிரியர்களும், உரை யாசிரியர்களும் மயக்கமான பொருள் எழுதினர். பெருங்குருகு, யானையங்குருகு அல்ல என்பது கூறப்பட்டது. பெருங்குருகு, பெருநாரை என்பவை எவை, என்பது பின்னர் ஒரு கட்டுரை யில் விளக்கப்படும். யானையங்குருகு ஆனைச்சாத்தனுக இருக்கலாம் என்று பெயரொற்றுமை காரணமாக உ. வே. சாமிநாதையர் கருதினர். ஆனல் ஆனைச்சாத்தன் வேறு பறவையாகும். இது வலியன் குருவியைக் குறிக்கும் என்பது வேறு கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. யானையங்குருகு எனப்படும் செம்போத்து ஆங்கிலத்தில் The Common Coucal அல்லது Southern Crow Pheasant என்று அழைக்கப்பட்டது. இதன் அறிவியற் பெயர் Centropus Sinensis Perroti என்ப தாகும்.

# மாநாய்கனும் மாசாத்துவானும்

[மயிலை சீனி வேங்கடசாமி]

உலகப் புகழ்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினத்திலே கோவலனும் கண்ணகியும் பிறந்து வாழ்ந்தார்கள். அவர்களுடைய பெற்றோர் புகார்ப்பட்டினத்தில் பெரு வாணிகராகத் திகழ்ந்தார்கள். இவர்களைத் தவிர வேறு பல வாணிகர் புகார்ப்பட்டினத்தில் வாணிகஞ் செய்திருந்தார்கள். அவர்களில் சிலர் எட்டி என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தார்கள். அக்காலத்தில் வாணிகத்தினால் பெரும் பொருள் ஈட்டிச் செல்வங்கொழித்தவருக்கு 'எட்டி' என்னும் பட்டங் கொடுத்துத் தமிழ்வேந்தர் அவர்களைச் சிறப்புச் செய்தார்கள். எட்டிப் பட்டம் வழங்கும்போது அரசன் 'எட்டிப்பூ' என்னும் பொற்பூவை அளிப்பது வழக்கம். எட்டிப் பட்டம் பெற்ற ஒரு வாணிகன் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததை மணிமேகலை கூறுகிறது. எட்டிகுமரன் ஆசனத்தில் அமர்ந்து யாழ் வாசித்துக்கொண்டிருந்ததை மணிமேகலை இவ்வாறு கூறுகிறது.

> *"மகர யாழின் வான்கோடு தழீஇ*
> *வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவைபின்*
> *எட்டி குமரன் இருந்தோன்."*
>
> (மணி : பளிக்கறைபுக்க காதை. 56-58)

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த இன்னொரு வாணிகன், தருமதத்தன் என்னும் பெயருடையவன், பாண்டி நாட்டு மதுரைக்குச் சென்று வாணிபஞ் செய்து பெரும் பொருள் ஈட்டினான். அப்போது பாண்டிய அரசன் அவனுக்கு 'எட்டி'ப் பட்டமும் எட்டிப்பூவும் வழங்கிச் சிறப்புச் செய்தான் என்பதை மணிமேகலை காவியமே கூறுகிறது.

> *"வாணிக மரபின் வருபொருள் ஈட்டி*
> *நீணிதிச் செல்வனாய் நீணில வேந்தனின்*
> *எட்டிப் பூப்பெற்று இருமுப் பதிற்றியாண்டு*
> *ஒட்டிய செல்வத்து உயர்ந்தோன் ஆயினன்."*
>
> (மணி : சிறைசெய்காதை. 111-114)

காவிரிப்பூம்பட்டினத்தில் கப்பல் வாணிகனாக இருந்த சாதுவன் என்பவன் தன்னுடைய செல்வத்தையெல்லாம் சூதாட்டத்திலும் கணிகையரிடத்திலும் செலவு செய்து வறுமையடைந்தான். பிறகு அவன் தான் இழந்த செல்

வத்தை மீண்டும் பெறுவதற்காகக் கப்பல் வாணிகத்தைத் தொடங்கி கிழக்குக் கடலில் சாவக நாட்டுடன் வாணிகஞ் செய்யக் கப்பல் ஏறிச் சென்றதை மணிமேகலை காவியமே கூறு கிறது. (மணி: ஆதிரை பிச்சையிட்ட காதை) இவ்வாறு சங்ககாலத்துக் காவிரிப்பூம்பட்டினத்தில் பெரிய பெரிய வாணி கர் இருந்ததை யறிகிறோம். காவிரிப்பூம்பட்டினம் அக்காலத் தில் உலகப் புகழ்பெற்றிருந்த துறைமுகப் பட்டினம். அங் கிருந்த வாணிகர், வாணிகப் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றுமதி செய்து கடல் கடந்த நாடுகளுக்கு அனுப்பியும், இறக்குமதியான பொருள்களை உள்நாடுகளில் வணிகச் சாத்து களின் மூலமாக அனுப்பி விற்றும் பெருஞ்செல்வத்தைத் தேடினார்கள். அவ்வாறு வாணிகஞ் செய்தவர்களில் கண்ணகி யின் தந்தையும் கோவலனின் தந்தையும் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள். அவர்களுடைய பெயரே அவர்கள் பெரிய வாணிகர் என்பதைத் தெரிவிக்கின்றன.

## மாநாய்கன்

கண்ணகியின் தந்தை **மாநாய்கன்** என்று பெயர் பெற் றிருந்தான். மாநாய்கன் என்பது அவனுடைய சொந்தப் பெயர் அன்று; சிறப்புப் பெயர். மாநாய்கன் என்பது மாநாவி கன் என்னும் சொல்லின் திரிபு. மா - பெரிய. நாவிகன் - கப்பல் வாணிகன். (நாவாய் - கப்பல். நாவிகன் - கப்பற் றலைவன்) மாநாவிகன் என்னும் பெயர் திரிந்து மாநாய்கன் என்று ஆயிற்று. கடல் கடந்த அயல் நாடுகளுடன் கப்பல் வாணிகஞ் செய்தபடியால் இவன் மாநாய்கன் என்று பெயர் பெற்றான். இவனுடைய முன்னோரும் பரம்பரையாக நாவாய் வாணிகராக இருந்தனர் போலத் தெரிகின்றது. பெருஞ் செல்வனாகிய மாநாய்கனுக்கு ஒரே செல்வ மகள் கண்ணகி. சிலப்பதிகார காவியம் மாநாய்கனையும் அவன் மகள் கண்ணகி யையும் இவ்வாறு கூறுகிறது.

> "நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
> போகநீள் புகழ்மன்னும் புகார்நகர் அதுதன்னில்
> மாகவான் நிகர்வண்கை **மாநாய்கன்** குலக்கொம்பர்
> ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண் டகவையாள்."
>
> (சிலம்பு: மங்கல வாழ்த்துப் பாடல்)

நாகநீள்நகர் - சுவர்க்கம். நாகநாடு - பவணலோகம். மாக் வான் - விசும்பின் மேகம். மாநாய்கன் - மாநாவிகன் (சிறப்புப் பெயர்). ஈகை - பொன்.

மாசாத்துவான்

கோவலனுடைய தந்தை மாசாத்துவான் என்று பெயர் பெற்றிருந்தான். மாசாத்துவான் என்பது சொந்தப் பெயர் அன்று; குடிப்பெயர். சாத்து என்றால் வணிகச் சாத்து, தரை வாணிகர். தரை வழியே பல நாடுகளுக்குச் சென்று வாணிகஞ் செய்யும் குழுவுக்குச் சாத்து என்பது பெயர். சாத்துவன் - சாத்தின் தலைவன். மாசாத்துவான் - என்பது பெரிய சாத்தின் தலைவன். மாசாத்துவான் தன்னுடைய செல்வச் சிறப்பினாலே காவிரிப்பூம்பட்டினத்துப் பெருமக்களில் முதல் மகனாக விளங்கினான். சோழ அரசனுக்கு அடுத்தபடியாக இவன் முதல்வனாகக் கருதப்பட்டான். இவனுடைய ஒரே மகன் கோவலன். இதனைச் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகிறது.

> "பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
> ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்
> வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
> இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண் டகவையான்."
>
> (சிலம்பு : மங்கல வாழ்த்துப் பாடல்)

பெருநிலம் முழுதாளும் பெருமகன் - சோழ அரசன். பிறர்க்கு ஆர்த்தும் - பொருளில்லார்க்கு நிறைவிக்கும் (கொடுக்கும்) இருநிதிக்கிழவன் - குபேரன். (குபேரன் போன்ற மாசாத்துவான்) மகன் - கோவலன்.

கோவலனுடைய மூதாதையர், தரை வாணிகம் மட்டும் அல்லாமல் கடல் வாணிகமும் செய்தனர் என்பது தெரிகின்றது. கோவலனுடைய பாட்டன் ஒருவன் கிழக்குக் கடலில் (வங்காளக் குடாக்கடலில்) நாவாயில் சென்றபோது நாவாய் உடைந்து அல்லற்பட்டுக் கடலில் நீந்திக்கொண்டிருந்தபோது, கடல் தெய்வமாகிய மணிமேகலா தெய்வத்தின் அருளால் கரையேறி உயிர் பிழைத்தான் என்றும், அதன் காரணமாகவே, கோவலனுக்கு மாதவியிடத்தில் பிறந்த குழந்தைக்கு மணிமேகலை என்று பெயர் இட்டான் என்றும் சிலப்பதிகாரங் கூறுகிறது.

> "மூமுது கணிகையர் மாதவி மகட்கு
> நாம நல்லுரை நாட்டுதும் என்று
> தாமின் புறூஉம் தகைமொழி கேட்டாங்(கு)
> இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
> உடைகலப் பட்ட எங்கோன் முன்னாள்
> புண்ணிய தானம் புரிந்தோன் ஆகலின்

நண்ணுவழி யின்றி நாள்சில நீந்த
'இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வேன்
வந்தேன், அஞ்சல் மணிமே கலையான்.
உன்பெருந் தானத் துறுதி ஒழியாது
துன்பம் நீங்கித் துயர்க்கடல் ஒழி'கென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென
அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
'மணிமேக லை'என வாழ்த்திய ஞான்று.''

(சிலம்பு: அடைக்கலக்காதை 25-39)

வணிகச் செல்வராகிய மாசாத்துவானும் மாநாய்கனும் கோவலனுக்குக் கண்ணகியை மணஞ்செய்வித்துத் திருமண விழாவைச் சிறப்பாக நடத்தினுர்கள். திருமணமான சில காலத்துக்குப் பிறகு கோவலனுடைய தாய், தன்னுடைய மகன் இல்வாழ்க்கையை இனிது நடத்திச் சிறப்பாக வாழ வேண்டும் என்னும் கருத்துடன் கண்ணகியையும் கோவலனை யும் தனித்து வாழ மனையறம்படுத்தினுள். சுற்றத்தாரைப் பேணுதல், விருந்தினரைப் போற்றுதல், துறந்தோரைக் காத்தல், இரந்தோர்க்கு அளித்தல் முதலிய மனையறத்தை நடத்தி வாழ்வாங்கு வாழ்வதைக் காண விரும்பினுள். தனி மாளிகையும் பொன்னும் பொருளுங் கொடுத்து ஏவலாளர் முதலிய பணியாளர்களையும் அளித்தாள். இதனைச் சிலம்பு,

''மறப்பருங் கேண்மையோடு அறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
வுரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க''

என்று கூறுகிறது.

மறப்பு அரும் - மறக்க முடியாத. கேண்மை - சுற்றம். அறப்பரிசாரம் - துறந்தாரைப் போற்றுதல் முதலிய அறச் செயல். விருந்துபுறந் தருதல் - புதிதாக வந்தவர்களை உபசரித்துப் போற்றுதல். வேறுபடுதிரு - வெவ்வேறுன செல்வம். வீறுபட - பெருமைப்பட. உரிமைச் சுற்றம் - பணிவிடையாளர்கள்.

கோவலனுடைய பெற்ருேர் அவனிடம் என்ன எதிர் பார்த்தார்களோ அந்தச் சிறந்த வாழ்க்கை நிறைவேறவில்லை. ஆடல்பாடல் முதலிய விநோதங்களில் மனத்தைச் செலுத்தி

மாதவியின் மையலில் சிக்கிப் பொன்னும் பொருளும் இழந்து வறுமையடைந்து கடைசியில் ஒருவரிடமும் சொல்லாமல் மதுரைக்குச் சென்று, அங்குக் கள்ளன் என்று பழியடைந்து இறக்க நேரிட்டது. கண்ணகி, இறந்துபோன தன் கணவனுக்கும் தன் குலத்துக்கும் நேரிட்ட வீண்பழியை நீக்குவதற்காகப் பாண்டியன் சபையில் வழக்காடி வீண்பழியை நீக்கிப் பின்னர் உயிர் நீத்தாள். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவனை மாடல மறையோன், கன்னியாகுமரிக்குச் சென்று புனித நீராடித் திரும்பி வருகிற வழியில் மதுரையில் வந்து தங்கினபோது கோவலனின் மரணமும் கண்ணகியின் வழக்கும் நடந்தன. பிறகு மாடலன் தன் ஊருக்கு வந்து கோவலன் கண்ணகியரின் பெற்றோருக்கும் ஊராருக்கும் இந்தச் செய்திகளைச் சொன்னான்.

இந்த அவலச் செய்தியைக் கேட்ட கோவலனுடைய தாயும் கண்ணகியினுடைய அன்னையும் மக்களை இழந்த தீராத் துயரத்தினாலும், அவர்களுக்கு நேரிட்ட பெருந்துன்பங்களை எண்ணியும் மனநோயினால் இறந்துபோனார்கள். மாசாத்துவான் தன்னுடைய பெருஞ் செல்வங்களைத் தானதருமம் செய்து வாழ்க்கையை வெறுத்துப் பௌத்த சமயத்தைச்சார்ந்து பௌத்த பிக்குவாகி ஊரைவிட்டுப் போய்விட்டான். மாநாய்கனும் தன்னுடைய பெருஞ் செல்வத்தைத் தானதருமம் செய்து வாழ்க்கையை வெறுத்து ஆசீவக மதத்தைச் சார்ந்து துறவியாகித் தேசாந்தரஞ் சென்றான். இவ்வாறு இவ்விரு பெருஞ் செல்வர்களாகிய வாணிகப் பெருமக்களின் வாழ்க்கை முடிவுற்றது. இவற்றையெல்லாம்,

''செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க் குரைக்க
மைந்தற் குற்றதும் மடந்தைக் குற்றதும்
செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக்
கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி
மாபெருந் தானமா வான்பொருள் ஈத்தாங்கு
இந்திர விகாரம் ஏழுடன் புக்காங்கு
அந்தர சாரிகள் ஆறைம் பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் துறவி யெய்தவும்
துறந்தோன் மனைவி மகன்துயர் பொறாஅள்
இறந்ததுய ரெய்தி இரங்கிமெய் விடவும்
கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத் தாசீவகர்முன்
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்

தானம் புரிந்தோன் தன்பயனைக் கிழத்தி
நாள்விடூஉ நல்லுயிர் நீத்துமெய் விடவும்"
(சிலம்பு: நீர்ப்படைக் காதை 87-102)

வாழ்த்துக் காதையிலும் இந்தச் செய்தி கூறப்படுகிறது.

"கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் தன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
மாசாத்து வான்துறவும் கேட்டாயோ அன்னை
மாநாய்கன் தன்துறவும் கேட்டாயோ அன்னை."
(காவற்பெண்டரற்று,)

---

## *மறைமலையடிகள் தமது இளமைக் காலத்தில் டாக்டர் சாமிநாதையரவர்கட்கு எழுதிய கடிதம்

மகா ா ா ஸ்ரீ ஐயரவர்களது மாட்சிமை தங்கிய சமூகத்திற்கு வந்தனம் தந்தெழுதிய கடிதம்.

தங்களது திருமுகத்தைக் காணப்பெறாத வறிஞனுக்குத் தங்கள் புகழ் முகத்தைக் கொண்டு காண்பித்த வியன்பெருமை சாலவும் வியக்கத் தக்கது. இத்துணை முயற்சி கருவியாகச் சிந்தாமணி முதலிய பேரிலக்கியங்களை, எழுதுவோரால் நேர்ந்த வழூஉக்களைந்து பதிப்பித்துலகின்கண் இசை நிறுவிய தங்களது நட்பை முன்னிட்டு ஏனைய தமிழ்க் காப்பியங்களையும் இசை நாடகப் பகுதிகளையும் பதிக்குமாறு திருச்சிற்றம்பல முடையார் ஆயுளையும் அக் கருத்தையுந் தங்களிடத் தருள்புரியுமாறு அவர் பூங்கழலினைப் பராவுகின்றனம், தாங்க ளிப்போழ்து, 'புறநானூறும்', 'மணிமேகலையும்' அச்சிடுவித்து முடிவு செய்திருப்பதாகக் கேள்வி. அஃதுண்மையாயினும், அன்றி இரண்டிலொன் றவ்வாறிருப்பினும் புக் போஸ்ட் (V. P. P. Book Post) மூலியந் தயைகூர்ந் தனுப்புக.

N. B.: தாங்க ளேதேனும் பழைய தமிழ் நூல்கள் அச்சிடுவித் திருப்பின் தெரிவிக்குமாறு கோருகின்றனம்.

நாகை, 22—9—1894

இங்ஙனம்,
தங்கள் நட்பினைக் கோரிய,
R. S. வேதாசலம் பிள்ளை.

---

* சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலே தமிழ்ப் பண்டிதராவதற்கு நான்கு ஆண்டுகட்கு முன் அடிகளார் தமது 18 ஆம் அகவையில் வடமொழிக் கலப்பால் தமிழுக்கு ஏற்பட்ட தீங்கினை உணராதிருந்த காலத்தில் தமிழ் கற்பதிலே அவா மீக்கூர்ந்து சிறந்த தமிழ் இலக்கியங்களை வாங்குவதிலே காட்டிய அளவிறந்த பற்றும், தமிழ்நூல் பதிப்பாளரிடம் கொண்டிருந்த அன்பும் புகழ்ச்சியும் இக் கடிதத்தால் நன்கு விளங்குகின்றன. இன்றையத் தமிழாசிரியன்மார் பின்பற்றுதற்குரியன.

வ. சு.

# இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா சண்முகசுப்பிரமணியம்]

(9)

## இறையுணர்வும், இன்றைய ஆத்திகமும்

ஆத்திகம், நாத்திகம் என்ற இரு சொற்களையும் நாம் அடிக்கடி கேட்கின்றோம். இன்றைய ஆத்திகம், இன்றைய நாத்திகம் இவை பற்றிச் சிந்திப்பது இதுவரை இறைமை குறித்து நாம் கொண்ட ஆராய்ச்சிக்கு உகந்ததாகும்.

*     *     *     *

சமயங்களும், சாத்திரங்களும் :

ஆத்திகம் என்றால் இறைமை பற்றிய நம்புறுதி என்று அகராதிகள் கூறுகின்றன.

இன்று ஆத்திகம் என்பது பல மதங்களாகப் பிரிந்து நிற்கிறது. ஒவ்வொரு மதமும் பல கிளைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. மதம் ஒவ்வொன்றையும் அதன் பிரிவு களையும் சேர்ந்தவர்கள் தாங்கள் கொண்ட கொள்கைகளே நேரானவை என்ற உறுதிப்பாட்டுடன் இருக்கின்றனர். அந்தந்த மதத்திற்கு உரிய சாத்திரங்களும் சடங்குகளுமே அந்தந்த மதத்தின் சிறப்புக்களாகக் கருதப்படுகின்றன.

சமயவாதிகள் அனைவருமே இறைமை ஒன்று உள்ள தென நம்புகின்றனர். ஆனால், இறைநலம் பெற வேண்டு மெனில், தத்தம் சமயங்கள் சாரும் சாத்திரங்களை ஏற்று, அச்சாத்திரங்கள் கூறும் சடங்குகளை ஆற்ற வேண்டும் என்று அவர்கள் திடமாக நம்புகின்றனர், கூறுகின்றனர். அச்சாத் திரங்களும் சடங்குகளும் இறைமை நம்பிக்கையோடு இணைந்து விட்டன. நாளடைவில், இறைமை நம்பிக்கை என்பது சாத்திரச் சடங்குகள்மீது கொள்ளும் நம்பிக்கைதான் என்ற கருத்து நிலவி நிலைத்தது. எனவே, சாத்திரச் சடங்குகளே அந்தந்தச் சமயங்களின் அடிப்படை ஆயின. முடிவில், புற நிலையான சாத்திரங்களும் சடங்குகளுமே சமய வாழ்வில் வலிந்து நின்றன, அகநிலையான இறைமையுணர்வு நலிந்து ஒடுங்கியது!

ஏன், எவ்வாறு இந்த நிலை ஏற்பட்டது?

### தெய்வ மலர்கள் :

உலகத்து உயர்ந்த சமயங்கள் அத்தனையும் அகவுணர்வான இறையுணர்வினை மக்களுக்குப் புலப்படுத்தும் முயற்சியிலே பூத்த நல்மலர்கள்தாம். உலகப் பகுதிகள் ஒவ்வொன்றன் நிலத்துக்கும் நீர்வளத்துக்கும் ஏற்ப, மக்களின் வாழ்க்கைச் சூழல்களுக்கு ஏற்ப அம்மலர்களின் வண்ண வடிவங்கள் வேறுபட்டன; காலத்திற்கேற்ப அவற்றின் கோலங்கள் அமைந்தன. 'கொய்யாது குவியாது குமையாது மணம் வீசும் கோமளத் தெய்வமலர்களாக' அச்சமயங்கள் மலர்ந்து ஒளிர்ந்தன. வெவ்வேறு வண்ணங்களையும் வடிவங்களையும் அம்மலர்கள் கொண்டிருந்தாலும், அவற்றின் மணத்திலே வேறுபாடில்லை, குணத்திலே மாறுபாடில்லை.

மலர்களுக்குற்ற மணமே அவற்றின் தன்மையும் உண்மையுமாகின்றது. அந்த உண்மைமணம் அனைத்து மலர்களிலும் ஒன்ருகவே இருந்தது. பல்வேறு வண்ணங்களில் தோன்றிய சமய மலர்கள் இறையுணர்வு என்ற இனிய மணத்தினையே வீசி விளங்கின.

ஆனுல், மக்களின் கண்ணைக் கவர்ந்தவை மலர்களின் வண்ணங்களும் வடிவங்களுந்தாம். மலர்களின் மணத்தை நுகராமல் அவற்றின் வண்ணத்திலும் வடிவத்திலுமே மயங்கி நின்றனர், மக்களில் பெரும்பாலோர். அவரவர்களுக்கு உகந்த வண்ணத்தை உயர்ந்ததெனக் கொண்டனர். சிவப்பு நிறப் பூவே சிறந்தது என்று கூறினர் சிலர். மஞ்சள் நிற மலரே மதிப்புடையது என்றனர் சிலர். நீலநிறப் பூவின் நீர்மைக்கு ஈடேது என்று கூவினர் சிலர். இவ்வாறு, மலர்களின் வெளித்தோற்றமான வண்ணங்களாலும் வடிவங்களாலும் மட்டுமே கவரப்பட்ட மக்கள் அம்மலர்களின் உண்மைத் தன்மையான மணத்தையும் குணத்தையும் மறந்தனர்.

### வண்ணத்தில் மறைந்தது மணம் :

மலர்களின் அருகில் சென்று முகர்ந்தால்தானே அதன் மணம் தெரியும்? ஆய்ந்து பார்த்தால் தானே அதன் குணம் தெரியும்? மலரின் வண்ணத்திலேயே மயங்கியவர்கள் அதன் அருகில் செல்லுவதில்லை; அதை ஆய்ந்து பார்ப்பதில்லை. சிவப்பு வண்ணத்தை விரும்பியோர் மற்ற வண்ணப் பூக்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை; வேறு வண்ணப் பூக்களைக் கண்ணுல் காணுவதுகூட, தாம் போற்றும் பூவைப் பழிப்ப

தாகும் எனக் கருதினர். வண்ணத்தில் வேறுபட்ட மலர்களை அணுகவே அஞ்சுவோர்கள் அம்மலர்களின் மணத்தை எப்படி நுகர்வார்கள்? எனவே, தாம் போற்றும் வண்ணங்கொண்ட மலரின் மணத்தையும் அவர்கள் முகர்வதில்லை, ஏனைய வண்ணமலர்களின் மணத்தையும் அவர்கள் முகர்ந்துணர முயலுவதில்லை.

இதன் பயன் என்ன? வாசமலர்களின் சிறப்பு அவற்றின் வண்ணங்களோடு நின்றுவிட்டது; வடிவங்களோடு அடங்கி விட்டது. அவற்றின் மணமும் குணமும் பெரும்பான்மை மக்கள் மனத்தில் இடம்பெறவில்லை.

இந்நிலையைக் கண்டு வருந்தினர் ஒரு மெய்யறிவாளர்.

"மலரின் உண்மை அதன் மணத்திலன்றோ இருக்கிறது. மணத்தை மறந்து அம்மலரின் நிறத்திலும் வடிவத்திலுமே மயங்கி நின்று விடுகின்றனரே மக்கள்," என்று அவர் மனம் வேதனைப்பட்டது. "கண்ணைக் கவரும் நிறங்கள் மலர்களுக்கு இருப்பதால்தானே அந்நிறங்களிலேயே மக்கள் மயங்கி விடுகின்றனர். அத்தகைய நிறமேதும் இல்லாத மலரை உற்பத்தி செய்ய வேண்டும். நிறமில்லாத மலராக இருந்தால் மக்களின் கவனம் அதன் மணத்திலே ஈடுபடும்," என்று அவர் கருதினர். நிறமே இல்லாத மலர் இருக்க முடியாதன்றோ? எனவே, கவர்ச்சி வண்ணமில்லாத வெண்மை நிறப் பூவை அவர் உற்பத்தி செய்தார். வெண்மை நிறம் கண்ணைக் கவருவதில்லை எனக் கருதி, வெள்ளை நிறப் பூவின் வழி மக்களை மலரின் மணத்தை நாடச் செய்யலாம் என்று அதில் முனைந்தார். மக்களில் சிலருக்கு அவர் கூறியது உண்மை என்று பட்டது. சில காலம் அவர்கள் மலரின் நிறத்தைவிட மணமே உண்மையானது என்று உணர்ந்தனர்.

வண்ணங்களாலேயே ஈர்க்கப்பட்ட மக்கள் பலருக்கும் இந்த உண்மையைப் புகட்டுவது எளிதாக இல்லை. கண்களுக்குப் புலனுகாத மணத்தைவிடக் கண்களைக் கவரும் வண்ணங்களையே பெரும்பான்மை மக்கள் பெரிதென மதித்தனர். எந்த நிறத்தைச் சிறப்பெனக் கொள்ளுகின்றனரோ அந்த வண்ணமலர்களையே மக்கள் விரும்புகின்றனர் என்ற நிலையில், வெள்ளை நிறப் பூவின் மணத்தை நுகர்ந்து நின்றோரும் வெள்ளை நிறத்தை மக்களிடையே புகழத் தொடங்கினர். எல்லா வண்ணங்களையும்விட அவ்வண்ணங்களனைத்திற்கும் பொதுவான வெண்மையே சிறந்தது என்று அவர்கள் பேசத் தலைப்

பட்டனர்! எனவே, மற்ற வண்ணமலர்களோடு வெள்ளைநிற மலரும் போட்டியிட்டது. மலரின் மணமே உண்மை என்று கூற வந்தோர் நாளடைவில் வெண்மை நிறத்தைப் புகழ்வதோடு நின்றுவிட்டனர்! இதன் பயனாக, சிவப்பு, மஞ்சள், நீல நிற மலர்களுடன் வெள்ளைநிற மலரும் கலந்து, மக்களின் கருத்தைக் கவர்வதை விட்டுக் கண்ணைக் கவரும் பொருளாகி விட்டது!

"பூவிற் சிறந்தது சிவப்பு நிறப் பூ" என்றும், "நீல நிறப் பூவிற்கு நிகராமோ வேறு" என்றும், "மஞ்சள் நிறப் பூவின் மாட்சியே பெரிது" என்றும், "வெள்ளைநிற மலருக்கு வேறு மலர் ஈடில்லை" என்றும் மக்களிடையே தீவிரமான போட்டி எழுந்தது. நிறத்தையும் பூவையும் பற்றிப் பேசிய மக்கள் பூவிற்கு மணம் உண்டு என்பதை மறந்தே விட்டனர். போட்டி இன்னும் வலுத்தது! போட்டி வலுக்க வலுக்க மக்கள் கவனம் நிறம் ஒன்றிலேயே ஈடுபட்டு நின்றது.

**நிறம் ஓங்கியது, நீர்மை ஒடுங்கியது :**

இந்த நிறம் சிறந்தது, அந்த நிறம் சிறந்தது என்ற வலுத்த போட்டியில் ஈடுபட்டோர் அந்நிறங்களைக் கொண்ட மலர்களையுங்கூட மெல்ல மெல்ல மறந்தனர். மணம் மறைந்தது போன்றே மலர்களும் நாளடைவில் மக்கள் மனத்திலிருந்து மெல்ல மெல்ல மறைந்தன. மணமும் மலர்களும் மறைந்த பின் எஞ்சி நின்றவை வெறும் நிறங்கள்தாம்! எனவே, "சிவப்பு நிறமே சிறந்தது" என்றும், "நீல வண்ணமே கோல மிகுந்தது" என்றும், "மஞ்சள் நிறமே மாட்சியுடையது" என்றும், "வெண்மை நிறந்தான் ஒண்மை மிகுந்தது" என்றும் மக்களிடையே வாத எதிர்வாதங்கள் எழுந்தன. மஞ்சள் நிறமே மாட்சியுடையது என்று கூறியவர்களில் சிலர் நீல வண்ணத்தைப் போற்றியவர்களின் தோற்றத்தையும் ஏற்றத்தையுங் கண்டு நீல நிறப் பற்றுளர்களோடு சேர்ந்தனர். இவ்வாறு, ஒரு நிறத்தைப் போற்றுவோரை வேறு நிறத்தைப் போற்றுவோரோடு சேர்ப்பதற்கான முயற்சிகள் நடந்தன. அம்முயற்சிகள் வன்முறை கொண்டதாகவும் ஆனதுண்டு.

மணத்தையும் மலர்களையும் மறந்துவிட்டு வண்ணங்களை மட்டுமே சார்ந்து நின்றோர், அவ்வண்ணங்கள் கொண்ட பொருள்களைக்கூடப் போற்றத் தலைப்பட்டனர். அந்தந்த வண்ணங்களில் அழகான பொருள்களை வனைந்து அவற்றையே

மலர்களென்றும் மணமென்றும் பாவித்துப் போற்றினர்! "வண்ண நிறப் பொருள் எதுவும் மலராகுமா? மணம் வீசுமா?" என்று கேட்டால், "எங்கள் வண்ணத்தில் அடங்குவதுதான் மலரும் மணமும், வேறு வண்ணங்களில்தான் அவை அடங்குவதில்லை" என்று முடிந்த முடிபாக அவர்கள் கூறினார்கள். "மணத்திற்கு ஏது நிறம்? நீங்கள் நிறத்தையே மணம் என்று நம்பிக் கூறுகின்றீர்களே?" என்று கேட்டால், "நிறத்தில் உள்ளதுதான் மணம். அதுவும் நாங்கள் கொண்ட நிறத்தில் தான் நறுமணம் நிறைய உண்டு," என்று உறுதிப்படக் கூறினர்!

அந்தந்த நிறங்களின் சிறப்பினை நீட்டிக் கூறிப் பெரிய நூல்கள் பல எழுதப்பட்டன. வண்ணப் பொருள்கள் தோன்றிய விதம் பற்றிக் கதைகளும் பாடல்களும் எழுந்தன. அந்தந்த வண்ணத்தைச் சேர்ந்து நின்றோர், இலக்கிய நயந் தோய்ந்த இந் நூல்களைக் கண்ணெனக் காத்தனர், புனிதமெனப் போற்றினர்.

உண்மையான மணத்தினை உற்றபடி நுகர்ந்து உயர்ந்த பயன் பெறும் மக்களில் சிலருக்கு, பெரும்பான்மையோரின் கூற்றும் போக்கும் தவறானவை என்பது நன்கு புலப்பட்டது. உண்மை மணத்தை நுகர்ந்தோர்க்கு, வெண்மை யென்றும் நீலமென்றும் சிவப்பென்றும் மஞ்சளென்றும் நிற வேறுபாடு காண்பது அறியாமை என்று பட்டது. ஆனால், வண்ணத்திலும் வடிவத்திலும் மயங்கி நின்ற பலரும் வண்ணமே மணம் ஆகும் என்று உறுதியாக நின்றனர்.

**மணத்தை மறந்தோரும், மணத்தை மறுப்போரும்:**

இந்நிலையில், மணத்தை நாடும் மனமே இல்லாத சிலர், "மணம் என்று எதுவுமே இல்லை; வண்ணங்களே மணம் என்ற பொய்க் கூற்றிலிருந்து இந்த உண்மை தெளிவாகிறது," என்று ஒரு கொள்கையை வகுத்தனர். "மணத்திற்கு நிறம் ஏது? வடிவம் ஏது? சிவப்பு நிறந்தான் மணம் என்போர் கூற்று உண்மையானால், மஞ்சள் நிறமே மணம் என்போரின் கூற்றுப் பொய்யாகி விடுகின்றதே! வண்ணங்களில்தான் மணம் உண்டு என்று கூறுவோர்களில் ஒருவர் கூற்று மற்றொருவர் கூற்றினைப் பொய்யாக்கி விடுகின்றது! எனவே, மணம் என்று எதுவுமே இல்லை என்பது தெளிவு,"—என்று பகுத்தறிந்து சிந்திப்போர் கூறினார்கள்.

இவ்வாருக, வண்ணங்களில் மட்டுமே மயங்கி மணத்தினை நுகராதோர் பலராயினர்; மணம் என்று எதுவுமே இல்லை என்று மறுப்போரும் உளராயினர்.

*　　*　　*　　*

வண்ணங்களில் மயங்கி மணத்தினை மறந்தோராகவே இன்றைய சமயவாதிகளில் பலர் இருக்கின்றனர். வண்ணங்களில்தான் மணம் உள்ளதென அவர்கள் வாதிடுகின்றனர். ''வண்ணங்களில் மணம் ஏது? என்று கேட்டு ''மணமெனப்படுவது மனத்தின் கற்பனை'' என்று கூறுவோர்களை நாத்திகர்கள் என இச் சமயவாதிகள் குறிப்பிடுகின்றனர்.

இதுவே, இன்றைய ஆத்திகர்கள் நிலையும் நாத்திகர்கள் நிலையும் ஆகும்.

மணமே இல்லாத பொருள்களில் மணம் உள்ளதென நம்பி, அதுவே மணமென்று அறுதியிட்டுக் கூறுவது இன்றைய ஆத்திகம்; மணம் என்று எதுவுமே இல்லை என்று எதிர்த்துக் கூறுவது இன்றைய நாத்திகம். மணத்தின் தன்மையை மறந்தோரின் மயக்கந்தான் மணத்தையே மறுப்போரின் வாதத்திற்கு உரம் ஊட்டுகிறது!

மணம் என்ற உண்மையை மறந்தோர் ஒரு சாரார், மணம் என்ற உண்மையை மறுப்போர் மற்றொரு சாரார்.

உண்மையை மறந்தது இன்றைய ஆத்திகம்; உண்மையை மறுப்பது இன்றைய நாத்திகம்.

இறையுணர்வு நிலையிலிருந்து இன்றைய ஆத்திகமும் நாத்திகமும் இவ்வாறு விலகியே உள்ளன.

இன்றைய ஆத்திகரும், மெய்யுணர்வும்:

இறையுணர்வு நிலையிலிருந்து நாத்திகம் விலகியிருக்கலாம், ஆனால், இறைமையை நம்பும் ஆத்திகமும் விலகியுள்ளது என்று கூறுவது பொருந்துமா என்ற வினா எழுகின்றது.

இறைமை பற்றிய நம்புறுதியை ஆத்திகம் என்று இக் கட்டுரையில் தொடக்கத்திலே கண்டோம். எனவே, ஆத்திகத்தில் இறைமை பற்றிய நம்புறுதி இருக்கிறதன்றோ? இவ்

வாறிருக்க, இன்றைய ஆத்திகம் எவ்வாறு இறையுணர்வி லிருந்து மெய்யுணர்விலிருந்து விலகியுள்ளது என்று கூறு கிறோம் ?

இந்த வினாவிற்கான விடை கண்டால்தான் இறையுணர் வான மெய்யுணர்வின் மேன்மை புலப்படும்.

மெய்யுணர்வு பெற்றோர் இறைமை என்ற செம்பொருள் மீது நம்புறுதி கொண்டோர்கள்தாம். ஆனால், இறைமை இதுதான் என்று ஒன்றைக் கூறி, அப்பொருளின்மீது நம்புறுதி பெறுவதன்று, மெய்யுணர்வு. இறைமையை நாம் அறிய இயலாது, தெரிய இயலாது, உணர இயலாது என்ற உண்மையை ஓர்ந்து, அந்த ஓர்வில் உதிப்பதே மெய்யுணர் வாகின்றது. இறைமை உள்ளது என்பதை நாம் உணர்ந் தாலும், இறைமையின் ஏற்றம் அனைத்தையும் நம்மால் உணர இயலாது என்ற மெய்யுணர்வே,

'தெரிவரிதாகிய தெளிவு',

'எண்ணுதற்கெட்டா எழில்',

'நுணுக்கரிய நுண்ணுணர்வு',

'சொற்பதங் கடந்த தொன்மை',

'உள்ளத்துணர்ச்சியில் கொள்ளவும் படாதது',

'உன்னற்கரியது',

'உரையுணர் விறந்த ஒருமை',

* 'நினைப்பரிய தனிப் பெருமை'

என்று இறைமையின் ஏற்றத்தை இயம்புகிறது.

"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாது"

— திருநாவுக்கரசர்

என்று பாடும் மெய்யடியாரின் குரல் மெய்யுணர்வின் மேன்மைக் குரலாகும்; பொய்யுணர்வினைப் போக்கும் குரலாகும்.

"ஈங்குளதென்று ஆங்குளதென்று ஓடியோடி, [எட்டுந்தோறும்,
இளைத்து இளைத்துத் தொடர்ந்து தொடர்ந்து

---

* திருவாசகம்.

*வாங்குபர வெளிமுழுதும் நீண்டு நீண்டு,*
*மறைந்து மறைந்து ஒளிக்கின்ற மணியே''*

—*இராமலிங்க அடிகள்.*

என்று காணொணாத இறைமையைக் கனிந்துருகிப் பாடினர் இறையுணர்வு பெற்றோர்.

''இறைமை என்பது அது என்று குறிக்க முற்பட்டால், எது என்று ஐயம் எழும்; எது என்று அதைச் சொல்லுவது? ஆதலால், அதுவே இறைமை என்று எதையுமே கூறுவதை அறவே விட்டுவிட்டேன்,'' என்று பாடுகிறார். மெய்யுணர்வில் தோய்ந்த அடியார்:

*''அதுவென்றால் எதுவெனவொன்(று) அடுக்குஞ் சங்கை*
*ஆதலினால் அதுவெனலும் அறவே விட்டேன்''*

—*தாயுமானவர்.*

இவ்வாறு, மெய்யுணர்வு பெற்றோரின் இறையுணர்வு, இறைமையைக் காட்டவோ அறியவோ உணரவோ இயலாது என்ற உண்மையுணர்வில் உதிப்பதாகும். ஆனால், சமய வாதிகள் கொள்ளும் நம்புறுதியோ ''இது இறைமை,'' ''இதுவே இறைமை,'' ''இறைமை என்பது இதுவன்றி வேறில்லை,'' என்று அரற்றுகிறது. சமயவாதிகளும் தலை வணங்கிப் போற்றும் மெய்யடியார்தாம் சமயவாதிகளின் கூற்றினை 'அரற்றுதல்' என்கிறார்:

*''சமய வாதிகள் தத்தம் மதங்களில்*
*அமைவதாக அரற்றி மலைந்தனர்''* —*மாணிக்கவாசகர்.*

சமயவாதிகள் மயங்கி மலைதலைக் கூறுவதோடு, அறுவகைச் சமயத்தினர் அரற்றும் கொள்கைகள் கானல்நீர் (பேய்த்தேர்) போன்றவை; மெய்யுணர்வு பெறவேண்டும் என்று நமக்குற்ற தாபத்தைத் தீர்ப்பதற்கு உதவாதவை என்று உருக்கத்தோடு அவர் பாடுகின்றார்:

*''.........................................*
*இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை*
*நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்*
*தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்*
*அவப்பெருந் தாப நீங்காது அசைந்தன....''*

—*திருவாசகம்.*

நம் உயிர்களாகிய நெடுங்கண்மான்கள் அறுவகைச் சமயங்கள் கூறும் கொள்கைகளை ஆர்வத்தோடு பருகுகின்றன.

ஆயினும், கானல் நீர் தாகத்தைத் தீர்க்காதது போல் உயிர்களின் மெய்ஞ்ஞான வேட்கையைச் சமய சாத்திரங்கள் தீர்க்கவில்லை. எனவே தாகந் தீராமல் மான்கணம் உழன்று கொண்டே நிற்கின்றதாம்! எவ்வளவு உள்ளத்தை உருக்கும் காட்சி! கானல் நீர்; தாகங்கொண்ட மான்கணங்கள்; ஆர்வத்தோடு பருகும் முயற்சி; தாகந்தீராத் தவிப்பு!

இறைமையின் திறனை உணருவது இயலாது என்ற மெய்யுணர்வு உண்மையான நீர் என்றால், இறைமை இதுதான் என்ற பொய்யுணர்வு கானல்நீரே ஆகும். நீருக்கும் கானல் நீருக்கும் எவ்வளவு வேறுபாடோ அவ்வளவு வேறுபாடுள்ளது மெய்யுணர்வுக்கும் இன்றைய சமயக் கொள்கைகளுக்கும்.

உள்ளத்தில் உறைவது இறைமை, அதை உள்கித் திளைப்பதே முறைமை-இவ்வாறு மெய்யுணர்ந்தோர் கூறுகின்றனர். சடங்குகளில் அடங்குவது இறைமை, சாத்திரம் போற்றுவதே கடமை-இவ்வாறு இன்றைய ஆத்திகர்கள் அரற்றுகின்றனர்!

இறைமையின் இயல்பினை உள்கி உள்கித் திளைக்கும் உள்ளம் உருகுகின்றது; இதுதான் இறைமை என்று எண்ணி இறுமாப்புக்கொள்ளும் இதயம் இறுகுகின்றது.

உருகிய உள்ளத்தில் உதிப்பது அன்பு; இறுகிய இதயத்தில் எழுவது அகந்தை.

அன்பு விளைப்பது ஒற்றுமையை; அகந்தை விளைப்பது வேற்றுமையை.

ஒற்றுமையுணர்வால் பெறுவது இன்பம்; வேற்றுமையுணர்வால் உறுவது துன்பம்.

இன்றைய உலகத்துத் துன்பங்கள் பலவும் இந்த வேற்றுமையுணர்வால் விளைந்தவைதாமே!

இயற்கை என்ற மலரிலே எழுந்து பரவும் மணமாக இறைமையை உணர்ந்த பெரியோர்கள்,

> "நறுமல ரெழுதரு நாற்றம்" போல்வாய்

என்றும்,

> "நாற்றத்தின் நேரியாய்"

என்றும்,

"பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை" —திருவாசகம்.

என்றும்,

"கள்ளுருகு மலர்மணம் போற் கலந்தெங்கும்
நிறைந்தோய்" —இராமலிங்கர்.

என்றும் இறைமையை ஏத்தினுர்கள்.

ஆனுல், சமயவாதிகளோ மனத்தை மறந்தனர், நிறத்தையே போற்றினர்! நிறமே மணமென்று நம்புறுதி கொண்டனர்!

மணத்தை நுகர்ந்தோர்க்கு, மலர்களின் வடிவங்களும் வண்ணங்களும் மறைந்து விடும், வேற்றுமை விலகும், ஒற்றுமை நிலைக்கும்.

ஆனுல்,

"உலகைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனய்க் கிடந்து தடுமாறும்"

அகந்தையாளர்களின் நெஞ்சிலே வேற்றுமை பிறந்தது.

எனவே, இறையுணர்வின் பெயரால் வெறுப்புத் தீ வளர்க்கப்பட்டது; பகைமைப் புயல் உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக உலகில் நிகழ்ந்த போர்கள் எத்தனை! மாய்ந்த உயிர்கள் எத்தனை!

"...............................
பொறித்த மதஞ்சமய மெல்லாம் பொய்
பொய்யே அவற்றில்—புகுதாதீர்"

என்றும், அது பேய் விளையாட்டென்றும், அதனுல் போருற்று மக்கள் மடிகின்றனரே என்றும் மனம் புழுங்கி வருந்துகின்றனர் இறையுணர்ந்தோர்:

"பேருற்ற வுலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்ப் பிடிப்புற்ற பிச்சுப்
பிள்ளை விளையாட்டென உணர்ந்திடாது
உயிர்கள் பல, பேதமுற்றங்கு மிங்கும்
போருற்று இறந்து வீண் போயினுர்"

—இராமலிங்க அடிகள்

சமயவாதிகள் இறைமைக்கு உருக்கொடுத்து அவன் மாடத்தில் உள்ளான், மண்டபத்திலே உள்ளான், கூடத்தில் உறைவான், கோயிலில் இருப்பான், வேடங்களில் அமைவான் என்று அறுதியிடும் கூற்றுக்களை இறையுணர்வு பெற்றுயர்ந்தோர் ஏற்பதில்லை, அவற்றை மறுக்கின்றனர் :

*"மாடத்துளா னலன் மண்டபத் தானலன்*
*கூடத்துளா னலன் கோவிலுள் ளானலன்*
*வேடத்து ளானலன் வேட்கைவிட்டார் நெஞ்சில்*
*மூடத் துளேநின்று முத்தி தந்தானே"* —திருமூலர்.

என்பது ஒரு மெய்யடியார் கூறும் உண்மை.

அவரே கூறுகின்றார்,

*"காலினில் ஊறும கரும்பினுள் கட்டியும்*
*பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்*
*பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை*
*காவலன் எங்குங் கலந்துநின் றானே"*

என்று எங்குங் கலந்து நிற்கும் இறைமை மாடத்திலும், மண்டபத்திலும், கூடத்திலும், கோவிலிலும் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், மாடத்திலும் மண்டபத்திலும் மட்டுமே இறைமை இருக்கிறது, கூடத்தையும் கோவிலையும் விட்டு வேறு இடத்தில் அஃது இல்லை என்ற சமயவாதிகள் கூற்றை மறுப்பதற்கென, மெய்யறிவாளர்கள் " மாடத்துளானலன், மண்டபத்தானலன்" என்று கூறி, மாடத்துள் உறைவதும் மண்டபத்துள் அமர்வதும் மட்டுமே இறைமை என்று எண்ணிவிட வேண்டாம் என்ற உண்மையை நமக்கு உணர்த்துகின்றனர்.

எனவே, இன்றைய ஆத்திகம் மெய்யுணர்வாக மேன்மையுற வேண்டுமெனில், சாத்திரங்களிலும் சடங்குகளிலும் மட்டுமே இறைமை அடங்கியுள்ளது என்ற தவறான எண்ணம் மறைய வேண்டும். உண்மை என்ற இலக்குக்கு இட்டுச் செல்லும் உயர்ந்த வழிகளாகச் சாத்திரங்களும் சடங்குகளும் இருக்கலாம் ; ஆனால், அவ்வழிகளே இலக்காகிவிடுவதில்லை. உயர்ந்ததொரு மலையுச்சியை எங்கு நின்றும் காணலாம். அளப்பரிய உயரமுள்ள இறைமையை இங்கு நின்றுதான் காணவேண்டும் என்று கூறுதல் பொருந்தாதன்றோ?

**உண்மைச் சமயத்திற்கு உற்ற சால்பு :**

அகநிலை உணர்வான இறையுணர்வைப் புறநிலைப் பொருள்கள் செயல்கள்வழிப் புலப்படுத்தும் புனித முயற்சியே ஒவ்வொரு சமயத்தின் அடிப்படையாகும். அம்முயற்சிகள் அரியன, பெரியன என்பதில் ஐயமில்லை. முயன்று முயன்று பார்த்தாலும் முயற்சி எதிலும் முழுதாக உணரப்படாத முழுப் பொருளை மக்களுக்கு உணர்த்தி, அவர்களை உயர்த்தும் முயற்சியில் முகிழ்த்தனவே சாத்திரங்கள் பலவும் எண்ணத்திற்கும் எட்டாத இறைமையை எளிவந்த பொருளாக மக்களுக்குக் காட்ட வேண்டும் என்ற ஏற்றமிகு ஆர்வத்தால் குறிகளையும் நெறிகளையும் வகுத்தன, அச்சமய சாத்திரங்கள். அக்குறி நெறிகள் உணர்த்தும் இறைமையை உணர்ந்து ஏற்றம் பெற்றோர் பலருண்டு. ஆயினும், நாளடைவில், அக்குறி நெறிகளால் குறிக்கப் பெறும் செம்பொருளைச் சிந்தனையில் கொள்ளாமல், அக்குறிகளையே, குறிக்கும் பொருள்களையே குறிப்பொருளான இறைமை என்று எண்ணும் நிலை வளர்ந்து வலுத்தது.

'அடையாளம்,' 'இலக்கு' என்ற இரு பொருள்களைக் கொண்டது 'குறி' என்ற சொல். எனவே, 'குறி' என்றதும் அடையாளக் குறி, இலக்குக் குறி இரண்டுமே நம் மனத்தில் எழுகின்றன. சமயக் குறிகளனைத்தும் அடையாளக் குறிகளே, இறைமைக் குறியே இலக்குக்குறி. அடையாளக் குறிகளையும், இலக்குக் குறியினையும் மக்கள் பிரித்துக் காணும் பெற்றிமை குறைந்ததால், அடையாளக் குறிகளான சமயக் குறிகளை இலக்குக் குறியான இறைமைக் குறியாக எண்ணும் நிலை எழுந்தது. எனவே, இலக்குக் குறியான இறைமை ஒன்றே என்ற உறுதியால் எழும் ஒற்றுமையுணர்வு நலிந்து, வேறுபட்ட சமயக் குறிகளால் எழும் வேற்றுமையுணர்வு வலுத்தது. இது சமயங்களின் குறையன்று, சாத்திரங்களின் குறையன்று. சமயங்களைச் சார்ந்தோர், சாத்திரங்களை ஓதுவோர் இவர்கள் கொள்ளும் எண்ணத்தில் எழுந்த குறை; ஆனால் இவர்கள் எண்ணத்தில் எழும் குறைகள் சமய சாத்திரக் குறைகளாகவே அமைந்து விடுகின்றன.

இந்நிலை, 'சாத்திரக் குறையன்று, அதைச் சார்ந்தோரின் குறை' தானென்று கூறுகின்றார் ஒரு ஞானக்கவி. எண்ணுதற்கரிய உண்மையை நமக்கு விளக்கும் பொருட்டு அதற்கு எத்தனையோ பெயர்களைச் சொல்லி விளக்குகின்றன நம் புனித நூல்கள். நாமோ அப்பெயர்களில் ஒன்றை மட்டும் எடுத்துக்

கொண்டு அந்தப் பெயரே உண்மையாகும் என்று கொள்ளுகிறோம்!

"நாமம் பல் கோடியொர் உண்மைக் குளவென்று
நான் மறை கூறிடுமே—ஆங்கோர்
நாமத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றந்
நான்மறை கண்டிலதே." —பாரதியார்.

உள்ளதனைத்திலும் உள்ளொளியாகி ஒளிர்ந்திடுவது இறைமை என்ற உண்மையை மக்கள் உள்ளங்களில் ஒளிரச் செய்து, உலகத்து உயிர்களனைத்தையும் அன்பு என்ற அருங் கயிற்றால் இணைத்துப் பிணைக்கும் ஏற்றமிகு குறிக்கோளைக் கொண்டு எழுந்த சமயங்களைச் சார்ந்தோர் பலர், இக்குறிக் கோளை மறந்து, புறச்சடங்குகளை மட்டுமே போற்றி நிற்பதால் தான், மக்களிடையே ஒற்றுமை குலைகின்றது, வேற்றுமையும் வெறுப்பும் வளர்கின்றன. எனவே, அன்புணர்வை வளர்க்க வேண்டிய ஆத்திகம் வெறுப்புணர்வை வளர்ப்பது ஆகிறது. இந்நிலை விந்தையிலும் விந்தையன்றோ!

மெய்யுணர்வு என்ற இறையுணர்வு ஒன்றுதான் உலகத்து மக்களை ஒன்று சேர்க்கவல்லது. இந்த மெய்யுணர்வு புகட்ட வந்த மேன்மைமிகு மதங்கள் பொய்யுணர்வு புகட்டிப் பொல் லாங்கு வளர்த்துவிடில் உலகத்துக்கு உய்வேது? தாய்ப் பாலமுதே நஞ்சானால் தவழுங் குழவிக்கேது புகல்? உப்பே தன்சுவை இழந்துவிடில், உப்பிற் கச்சுவை ஏற்றுவதார்?

*　*　*　*

அடுத்து, இறையுணர்வும் நாத்திகமும் என்பது பற்றிக் காண்போம்.

---

ஒருவன் தன்னுடன் பிறந்தாரினும் தன்னைப் பெரியனாக எண்ணி இறுமாந்து, அவரை இகழ்ந்து, அவர் துன்பங்களைப் பாராது ஒழுகுவனாயின் அவன் தந்தை அவனை விரும்புவாரா? அதுபோலவே, ஒரே கடவுளின் மக்களாகிய நாமும் நம்முள் அன்பின்றி நம்மையே நாம் பெரியராக எண்ணிப், பிறர் துயர் களையாது இறுமாந்து நடப்பமாயின், நம் முழுமுதற் றந்தையாகிய கடவுளும் நம்மைக் கண்டு பெரிதும் அருவருப்படைவர் என்பது உண்மையே யாம்.

— மறைமலையடிகள்
சைவசித்தாந்த ஞானபோதம். பக். ௫௬.

# தமிழ் ஒலிகளின் சிறப்பியல்புகள்

[டாக்டர் கி. கருணாகரன், எம். ஏ., பிஎச்.டி.

*மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*]

**முன்னுரை:** ஒரு மொழியின் ஒலிகளை அவற்றிற்கான சிறப்பியல்புகளைக் (Distinctive Features) கொண்டு ஆராயும் முறை இப்பொழுது வேகமாக வளர்ந்து வருகிறது. மனித மொழியின் ஒலிகளை ஆராயும்போது எல்லா ஒலிகளுக்கும் பொதுவான சிறப்பியல்புகள் யாவை என்பதை நாம் முதலில் காணவேண்டும். ஓர் ஒலியை விவரிக்க இச் சிறப்பியல்புகளின் சேர்க்கையைக் கூறினால் போதுமானதாகும். சிறப்பியல்புகளைக் கொண்டு ஒலிகளை விவரிப்பதில் பல நன்மைகள் இருப்பதை மொழியியலார் இன்று எடுத்துக் கூறுகிறார்கள். முதலாவதாக இச்சிறப்பியல்புகள் ஒரு மொழியில் பயன்படுத்தப்படும் ஒலியன்களைவிட (Phonemes) எப்பொழுதும் குறைவாகவே இருக்குமென்று சொல்லலாம். இரண்டாவதாக இச்சிறப்பியல்புகளை, ஒலிகளைப் பிறப்பிக்கும் உறுப்புக்களோடு பொருத்திக் காட்டுவதால் பல பயன்கள் உண்டு. இச்சிறப்பியல்புகளை எல்லா மொழிகளுக்கும் பொதுவான இயல்புகள் என்று எடுத்துக் கொள்ள முடியும்.

**சிறப்பியல்புகள் (Distinctive Features):** மனிதனுடைய ஒலித்திறமையின் அடிப்படையில் இயல்புகளைப் பிரிக்க முடியும். இந்த ஒலிக்கும் திறமையின் அடிப்படையில் இவ்வியல்புகளைப் பதினான்கு இயல்புகளாக மொழியியலார் பிரிக்கிறார்கள்.

**1. உயிர் இயல்பு (Vocalic):** இவ்வியல்பை உடைய ஒலிகள் வாய் வழியாகப் பிறக்கின்றன. பிறக்கும்போது வாய் வழியில் தடை ஏதும் இல்லை. அப்படியே தடைகள் ஏதும் இருக்குமேயாயின் அத்தடையின் உயரமோ நெருக்கமோ மொழியில் ‘இ’ அல்லது ‘உ’ தோன்றுவதைவிட அதிக அளவில் இருக்காது.

**2. துலங்கு இயல்பு (Sonorant):** இவ்வியல்பை உடைய ஒலிகள் தாம் பிறக்கும்போது இயற்கையாகவே குரல் தன்மை பெற்றுப் பிறக்கின்றன. ‘இ’ என்ற ஒலியில் இயற்கையிலேயே குரல் தன்மை இருக்கிறது. ஆனால் ‘ப’ என்ற ஒலியிலோ இயற்கையில் குரல் தன்மை இல்லை.

3. மெய் இயல்பு (Consonantal): இவ்வியல்பை உடைய ஒலிகள் பிறக்கும்போது ஒலிக்குழாயின் நடுவில் தடையோ, உராய்வோ ஏற்படுகிறது.

4. மேல் இயல்பு (High): இவ்வியல்பு நாக்கு தன்னுடைய இயற்கையான படுக்கை நிலையிலிருந்து மேலே எழும்புவதால் ஏற்படுகிறது.

5. கீழ் இயல்பு (Low): இவ்வியல்பு நாக்கு தன்னுடைய இயற்கையான படுக்கை நிலையிலிருந்து கீழே செல்வதால் ஏற்படுகிறது.

6. பின் இயல்பு (Back): இவ்வியல்பு நாக்கு அதனுடைய இயற்கையான படுக்கை நிலையிலிருந்து பின்னோக்கி இழுக்கப் படும்போது ஏற்படுகிறது.

7. முகடு இயல்பு (Coronal): நாக்கின் வரைக்கோட்டுப் பகுதி அதன் இயற்கையான படுக்கை நிலையில் இருந்து மேல் நோக்கி எழும்போது இவ்வியல்பை உடைய ஒலிகள் பிறக்கின்றன.

8 வெளி இயல்பு (Anterior): இவ்வியல்பை உடைய ஒலிகள் பல்லீற்றுக்கும் முன்னண்ணத்திற்கும் அப்பால், அஃதாவது அவற்றைத் தாண்டி ஏற்படும் தடையால் பிறக்கின்றன.

9. குவி இயல்பு (Rounded): இவ்வியல்பு கொண்ட ஒலிகள் பிறக்கும்போது தசை நார்கள் விறைப்புத் தன்மையைப் பெறச் செய்யப்படுகிறது. இவ்விறைப்புத் தன்மை வேண்டுமென்றே ஒலிகளில் நன்றாகத் தெரியுமாறு காற்றுச் சவ்வுகளுக்கு மேலுள்ள உறுப்புக்களால் ஏற்படுத்தப்படுகிறது.

10 குரல் இயல்பு (Voiced): இவ்வியல்பு காற்றுச் சவ்வுகள் அதிர்வதால் ஒலிகளுக்கு ஏற்படுகிறது.

11. தொடர் இயல்பு (Continuant): இவ்வியல்புள்ள ஒலிகள் பிறக்கும்போது ஒலிக்குழாயில் தடை ஏதும் இருப்பதில்லை. ஒரு சமயம் நெருக்கம் ஏற்பட்டாலும் அந்த நெருக்கம் ஒலியைத் தடை செய்கிற அளவில் இருப்பதில்லை.

12. மூக்கு இயல்பு (Nasal): இவ்வியல்பு கொண்ட ஒலிகள் தோன்றும்போது தொண்டையில் இருக்கும் தொங்கு சதை கீழே இறங்குகிறது. அவ்வாறு கீழே இறங்குவதால் மூக்குக்

குழாயின் வழியாகக் காற்று மூக்கு வழியே வெளிவர இடம் ஏற்படுகிறது.

**13.** இழு இயல்பு (Sharp): இவ்வியல்புள்ள ஒலிகள் தோன்றும்போது காற்று தாண்டிச் செல்லும் வழியில் ஒருவித ஆரவாரத் தன்மை ஏற்படுகிறது. இந்த ஆரவாரத் தன்மையால் உண்டாகும் ஒலி காற்று தாண்டிச் செல்லும் வழியில் அமைப்பைப் பொறுத்து இருக்கும். அமைப்பு என்பது காற்று தாண்டிச் செல்லும் கோணத்தையும் குழாயின் மேற்புறத்தையும் சார்ந்து இருக்கிறது என்று சொல்ல வேண்டும். இந்த இழு இயல்பு துலங்கு தன்மை இன்மையும் தொடர் இயல்பு இருப்பதுமான ஒலிகளிலே காணப்படும்.

**14.** விறைப்பு இயல்பு (Tense): இவ்வியல்பு குரல் வளைக்கு மேலே உள்ள ஒலியுறுப்புக்கள் ஓர் ஒலி உண்டாகும்போது எந்த நிலையில் உள்ளன என்பதைக் குறிக்கும், விறைப்பு இயல்புள்ள ஒலிகளை உண்டுபண்ண ஒலியுறுப்புக்கள் கணிசமான முயற்சி செய்து விறைப்புத் தன்மை பெறுகின்றன.

## தமிழ் ஒலிகள்: சிறப்பியல்புகள்

**1.** உயிரொலிகள் (Vowels)

| | | | |
|---|---|---|---|
| i) i (இ) > | +உயிர்<br>—மெய்<br>—பின்<br>—கீழ்<br>+மேல்<br>—விறைப்பு<br>+துலங்கு<br>—குவி | ii) i: (ஈ) > | +உயிர்<br>—மெய்<br>—பின்<br>—கீழ்<br>+மேல்<br>+விறைப்பு<br>+துலங்கு<br>—குவி |
| iii) e (எ) > | +உயிர்<br>—மெய்<br>—பின்<br>—கீழ்<br>—மேல்<br>—விறைப்பு<br>+துலங்கு<br>—குவி | iv) e: (ஏ) > | +உயிர்<br>—மெய்<br>—பின்<br>—கீழ்<br>—மேல்<br>+விறைப்பு<br>+துலங்கு<br>—குவி |

| v) a (அ) > | | vi) a: (ஆ) > | |
|---|---|---|---|
| | +உயிர் | | +உயிர் |
| | —மெய் | | —மெய் |
| | —பின் | | —பின் |
| | +கீழ் | | +கீழ் |
| | —மேல் | | —மேல் |
| | —விறைப்பு | | +விறைப்பு |
| | +துலங்கு | | +துலங்கு |
| | —குவி | | —குவி |

| vii) o (ஒ) > | | viii) o: (ஓ) > | |
|---|---|---|---|
| | +உயிர் | | +உயிர் |
| | —மெய் | | —மெய் |
| | +பின் | | +பின் |
| | —கீழ் | | —கீழ் |
| | —மேல் | | —மேல் |
| | —விறைப்பு | | +விறைப்பு |
| | +துலங்கு | | +துலங்கு |
| | +குவி | | +குவி |

| ix) u (உ) > | | x) u: (ஊ) > | |
|---|---|---|---|
| | +உயிர் | | +உயிர் |
| | —மெய் | | —மெய் |
| | +பின் | | +பின் |
| | —கீழ் | | —கீழ் |
| | +மேல் | | +மேல் |
| | —விறைப்பு | | +விறைப்பு |
| | +துலங்கு | | +துலங்கு |
| | +குவி | | +குவி |

## 2. மெய்யொலிகள் (Consonants)

| i) p (ப்) > | | ii) t (த்) > | |
|---|---|---|---|
| | —துலங்கு | | —துலங்கு |
| | —உயிர் | | —உயிர் |
| | +மெய் | | +மெய் |
| | —மேல் | | —மேல் |
| | —பின் | | —பின் |
| | —கீழ் | | |
| | +வெளி | | +வெளி |
| | —முகடு | | +முகடு |
| | —தொடர் | | —தொடர் |
| | —மூக்கு | | —மூக்கு |
| | —இழு | | —இழு |

| iii) ṭ (ட்) > | iv) c (ச்) > |
|---|---|
| — துலங்கு | — துலங்கு |
| — உயிர் | — உயிர் |
| + மெய் | + மெய் |
| + மேல் | + மேல் |
| — பின் | — பின் |
| — கீழ் | — கீழ் |
| — வெளி | — வெளி |
| + முகடு | + முகடு |
| — தொடர் | — தொடர் |
| — மூக்கு | — மூக்கு |
| — இழு | + இழு |

| v) k (க்) > | vi) m (ம்) > |
|---|---|
| — துலங்கு | + துலங்கு |
| — உயிர் | — உயிர் |
| + மெய் | + மெய் |
| + மேல் | — மேல் |
| + பின் | — பின் |
| — கீழ் | — கீழ் |
| — வெளி | + வெளி |
| — முகடு | — முகடு |
| — தொடர் | + தொடர் |
| — மூக்கு | + மூக்கு |
| — இழு | — இழு |

| vii) n (ன்) > | viii) n (ண்) > |
|---|---|
| + துலங்கு | + துலங்கு |
| — உயிர் | — உயிர் |
| + மெய் | + மெய் |
| — மேல் | + மேல் |
| — பின் | — பின் |
| — கீழ் | — கீழ் |
| + வெளி | + முகடு |
| + முகடு | — வெளி |
| + தொடர் | + தொடர் |
| + மூக்கு | + மூக்கு |
| — இழு | — இழு |

| | ix) l (ல்) > | x) ḷ (ள்) > |
|---|---|---|
| துலங்கு | + | + |
| உயிர் | + | + |
| மெய் | + | + |
| மேல் | — | + |
| பின் | — | — |
| கீழ் | — | — |
| வெளி | + | — |
| முகடு | + | + |
| தொடர் | + | + |
| மூக்கு | — | — |
| இழு | — | — |

| | xi) ḻ (ழ்) > | xii) r (ர்) > |
|---|---|---|
| துலங்கு | + | + |
| உயிர் | + | + |
| மெய் | + | + |
| மேல் | + | — |
| பின் | — | + |
| கீழ் | — | — |
| வெளி | — | + |
| முகடு | + | + |
| தொடர் | + | — |
| மூக்கு | — | — |
| இழு | + | — |

| | xiii) v (வ்) > | xiv) y (ய்) > |
|---|---|---|
| துலங்கு | + | + |
| உயிர் | — | — |
| மெய் | — | — |
| மேல் | + | + |
| பின் | + | — |
| கீழ் | — | — |
| வெளி | + | — |
| முகடு | — | — |
| தொடர் | + | + |
| மூக்கு | — | — |
| இழு | — | — |

# பதிப்புத் துறையிற் பட்டறிவு

(ச)

பன்னிரு திருமுறைகளில் முதல் எட்டுத் திருமுறைகளின் பழம் பதிப்புக்களைப் பற்றிய குறிப்புக்களை முன் இதழிற் கண்டோம். இனி எஞ்சிய மூன்று திருமுறைகளின் பழம் பதிப்புக்களைப் பற்றியுள்ள குறிப்புக்களை இவ்விதழிற் காண்போம்.

1864 இல் திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பது நாயன்மார்கள் அருளிச் செய்த ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாவும், சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டும் காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியாரால் பல சுவடிகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டுக் களாநிதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றன. இதன்கண் ஒன்பது நாயன்மார் திருப்பெயர்களும் பதிக வகையும் தெரியுமாறு 3 பாட்டுக்கள் உள்ளன. சில பதிகங்களிற் சில பாட்டுக்கள் சிதைவு பெற்றிருக்கின்றன.

1869 இல் திருமூலநாயனார் திருவாய் மலர்ந்தருளிய பத்தாந் திருமுறையாகிய திருமந்திரம் மூவாயிரம் சொர்க்கபுர ஆதீனத்தைச் சேர்ந்த திருமயிலை கார்த்திகேய சுவாமிகளாலும், தேனாம்பேட்டை சுப்பராய முதலியாராலும், திருநெல்வேலி சாலிவாடீசுர ஓதுவா மூர்த்திகளாலும் வழங்கப் பெற்ற சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து சிந்தாதிரிப்பேட்டை கொ. சண்முக சுந்தர முதலியார் கல்விக் களஞ்சிய அச்சுக்கூடத்திலே பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

1869 இல் பதினொராந் திருமுறை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் மாணாக்கர் சோடசாவதானம் சுப்பராய செட்டியாரவர்களால் பல சுவடிகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்யப் பெற்றுச் சு. கன்னியப்ப முதலியாரால் சென்னை அத்தினீயம் அண் டெலிநியூஸ் பிரான்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. இப்பதிப்பின்கண் ஒரு சில பாட்டுக்கள் குறைந்தும், சில பாட்டுக்களில் வரிகள் குறைந்தும் காணப்பெறுகின்றன.

1845இல் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம் முதற்பாகம் (இலை மலிந்த சருக்கம்) ஆனாய நாயனார் புராணம் முடிய மழைவை மகாலிங்கையர் நூதனமாகச் செய்த பொழிப்புரையுடன் சரசுவதி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது. திருவாவடுதுறை ஆதீன வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் பாடிய

சாத்துக் கவிகள் மூன்று காணப்பெறுகின்றன. அவற்றில் முதற்பாட்டை அடியிற் காண்க.

'நச்சினார்க் கினியர்பரி மேலழகர்
முதலியர்போல் நாவலோர்கள்
மெச்சுறநூற் குரையியற்ற யாவருமின்
றெனுமாற்றம் வீணேபோக
உச்சியின்மேற் பெரியர்கொளும் பெரியபுரா
ணத்தினுக்கோ ருரைசெய்தானால்
முச்சகமும் புகழ்மழவை மகாலிங்க
சிவமறையோன் முறையின் மாதோ.''

இதன் தொடர்பாகப் பிற சருக்கங்கள் வெளிவந்தனவா வென்பது தெரியக்கூடவில்லை.

1859 இல் பெரிய புராணம் (முதற் காண்டம்) (நமிநந்தி யடிகள் நாயனார் புராணம் முடிய) காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியாரால் ஆராய்ச்சி செய்வித்துக் கல்வி விளக்க அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது. ஒவ்வொரு நாயன்மார் புராணத்துக்கும் புராணமுடிவில் கதைச் சுருக்கம் உள்ளது. இப் பதிப்புக்குத் தாண்டவராய சுவாமிகள், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், அ. வீராசாமி செட்டியார், கோ. இராசகோபால்பிள்ளை, நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், வித்துவான் சுப்பராயபிள்ளை, கா. செல்வப் பெருமாள் கவிராச பண்டிதர், பாடி மாசிலாமணி முதலியார் ஆகியோர் சாத்துக் கவிகள் வழங்கியுள்ளனர். புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் இயற்றிய சிறப்புப் பாயிரமும், அவர்தம் ஆசிரியர் காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் இயற்றிய குருவணக்கமும் இதன்கண் காணப்பெறுகின்றன. இது முதற் புத்தகமாகும்.

1861 இல் பெரிய புராணம் இரண்டாங் காண்டம் இரண்டாவது புத்தகம் கதைச் சுருக்கத்துடன் வெளிவந்துள்ளது. இதன்கண் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் புதிதாக எழுதிய சாத்துக் கவியும், அவர்தம் ஆசிரியர் காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் முதற் புத்தகத்திற்கு எழுதிய குருவணக்கமும் காணப்பெறுகின்றன.

இவ்விரு புத்தகங்களிலும் தேவார முதற் குறிப்புக்கள் வருமிடங்களில் பதிகங்களின் முதல் கடைப் பாட்டுக்கள் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. அங்ஙனமே காரைக்காலம்மையார் புராணத்தில் அற்புதத் திருவந்தாதியில் இரண்டு பாட்டுக்களும், திருவிரட்டை மணிமாலையில் இரண்டு பாட்டுக்களும், சேரமான் பெருமாள் நாயனார் (கழறிற்றறிவார்) புராணத்தில்

பொன்வண்ணத் தந்தாதியில் இரண்டு பாட்டுக்களும் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

முதன்முதல் பெரிய புராணம் முழுமையும் வெளியிடப் பெற்ற பதிப்பு இதுவேயாகும். எனவே காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியாரவர்கட்குச் சைவவுலகு நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டதாகும்.

1870 இல் மேலே குறிப்பிட்ட கா. சபாபதி முதலியாரவர்களால் ஆராய்ச்சி செய்வித்துப் பெரிய புராணம் இரண்டு காண்டங்களையும் ஒன்று சேர்த்து ஒரே புத்தகமாகத் திருநெல்வேலியிலிருக்கும் பட்டணம் நமசிவாய செட்டியார் பொருளுதவியினால் திருமயிலை சுப்பராய ஞானியாரால் வர்த்தமானதரங்கிணி அச்சுக்கூடத்தில் பதிக்கப்பிக்கப் பெற்றுள்ளது.

1884இல் பெரிய புராணம் முதற்காண்டம் சூசனத்துடன் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் பரிசோதித்துக் காரைக்காலம்மையார் புராணம்வரை சூசனம் எழுதியுள்ளார். ஆறுமுக நாவலரவர்கள் மாணுக்கர் சதாசிவப்பிள்ளையால் பதிப்பிக்கப்பெற்றது. இதன்கண் "சூசனங்களிற் சிலபாகம் மாற்றி எழுத வேண்டுமென்று கருத்துக் கொண்டிருந்த நாவலர் ஐயா அவர்கள் அக்கருத்து முற்றுமுன் சிவபதம் அடைந்து விட்டமையால் அவை முன்னிருந்தபடியே பதிப் பிக்கப்பெற்றன" என்ற குறிப்பு இதன்கண் காணப்படு கின்றது.

1885 முதல் 1898 வரை பெரிய புராணம் முதற்காண்டத்தை இரண்டு பாகங்களாகவும், இரண்டாங் காண்டத்தை இரண்டு பாகங்களாகவும் பிரித்துத் திருவண்ணுமலையாதீனம் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் பதவுரை இயற்றியுள்ளார்கள். இப் பதிப்பில் நாயன்மார்களின் வரலாற்று விளக்கப் படங்கள் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இந்நான்கு பாகங்களும் பெரு வாயில் கிருட்டிணசாமி முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்றன. முதற் காண்டம் முதற் பாகம் 1887 இலும், இரண்டாம் பாகம் 1889 இலும் ஆதிகலாநிதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றன.

இரண்டாம் காண்டம் முதற்பாகம் 1885 ஆம் ஆண்டிலும், இரண்டாம் பாகம் 1898ஆம் ஆண்டிலும் முறையே சீவரக்ஷா மிர்த அச்சுக்கூடத்திலும், ஸ்ரீநிகேதன அச்சுக்கூடத்திலும் பதிப்பிக்கப்பெற்றன. இரண்டாம் காண்டம் இரண்டாம் பாகத்தில் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் ஏயர்கோன் கலிக் காம நாயனர் புராணம் 234 ஆம் செய்யுள்வரை எழுதிய உரையும், எஞ்சிய பகுதிக்குச் சிவஞான பாலைய தேசிக

சுவாமிகள் ஆதீனம் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய உரையும் உள்ளன.

மேலே குறிப்பிட்டபடி பெரிய புராணம் பாகம் பாகமாக அச்சிட்டு விற்கப் பெற்றமையால் சென்னை கோமளேசுவரன் பேட்டை நாகப்ப முதலி தெருவிலுள்ள பெருவாயில் கிருட்டிண சாமி முதலியார் வீட்டிலே முதற்கண் அச்சிடப்பெற்ற பாகங் களில் மிகவுங் குறைந்த படிகளும் பிற்பாகங்களில் கூடுதலான படிகளும் விற்கப்பெருமல் இருந்தன. அதனுல் அவர்களின் குடும்பத்தினர் துன்புற்றுக் கொண்டிருந்த நிலையினை அறிந்து 1919 ஆம் ஆண்டில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தை நிறுவிய திருவரங்கனுர் சென்னையில் கழகம் நிறுவுவதற்கு முன் தாம் நடத்திய திருசங்கர் கம்பெனிவழி நான்கு பகுதி களையும் தொகுதி தொகுதியாக வாங்கிக் கட்டடஞ் செய்து விற்றுக் கொடுத்தனர். அதனுல் அக்குடும்பத்தினர் தங்கட்குக் காலத்திஞற் செய்த உதவி குறித்துத் திருவரங்கனுரை வாழ்த் தினர். முதல் மூன்று பாகங்கள் விற்று முடிந்தபின் பிற் பாகம் மக்கி மடிந்து விட்டமையாலும் அவற்றைத் தனியாக வாங்குவாரின்மையாலும் எடைபோட்டுப் பழைய தாள் விலைக்குக் கொடுக்கும்படியாயிற்று.

பெரிய புராணம் சென்னைக் கிறித்தவ கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் திரு. சுப்பராய நாயகர் எழுதிய பொழிப்புரையுடன் முதற் பாகம் 1893 இலும், இரண்டாம் பாகம் 1896 இலும் சென்னை ஸ்டார் ஆப் இந்தியா அச்சுக்கூடத்தில் பதிப் பிக்கப்பெற்றன. பன்னிரு திருமுறைகளையும் மூன்று புத்தகங் களாகப் பதித்து வெளியிட்ட செந்தில்வேலு முதலியார் பெரிய புரா ணத்தை 1903இல் வெளியிட்டுள்ளனர். இவ்விரு பதிப்புக் களிலும் தேவாரத் திருமுறைப் பாடல்கள் கா. சபாபதி முதலியார் பதிப்பிலுள்ளபடி சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

1934 இல் சைவ சித்தாந்த மகா சமாசத்தார் வெளியிட்ட பெரிய புராணப் பதிப்பின்கண் இதுகாறும் வெளியிடப் பெற்ற பெரிய புராணப் பதிப்புக்கள் ஒன்றிலாவது பாட்டு முதற்குறிப்பகர வரிசை எழுதிச் சேர்க்கப் பெருத குறையினை எழுதியிருப்பது இங்கே கவனித்தற்குரியது. ஆனுல் 1845 இல் வெளிவந்த இலைமலிந்த சுருக்கம் மழவை மகாலிங்கையர் பதிப்பில் மட்டும் பாட்டு முதற்குறிப்பு உள்ளது என்பதைச் சமாசப் பதிப் பாசிரியர் பார்த்திருக்கமாட்டார்போலும்.

அடுத்த கட்டுரையில் மெய்கண்ட சாத்திரம் பதினுன்கின் பழம்பதிப்புக்களைப் பற்றி எழுதப்படும்.

— வ. சுப்பையா

# கந்தர் அநுபூதி

[என். கே. வேலன், பி. ஏ.]

(முன் சிலம்பு-௨௫, பரல்—கக இன் தொடர்ச்சி)

மயிலையும், வேலையும், சேவலையும் பாடும் பணியே எனக்குக் கொடுத்தருள்வாயாக என முருகப் பெருமானை வேண்டுகின்றார். யானையின் பெரிய முகத்தையுடைய அசுரனைப் போர்க்களத்தில் அழித்த விநாயகக் கடவுளின் தம்பியாகிய முருகப் பெருமானே, மயிலே என்றும், வேலே என்றும், அழகிய சேவலே என்றும் பாடுகின்ற தொண்டினை அருள வேண்டும் என முதற்பாட்டில் கேட்கின்றார்.

*"ஆடும் பரிவேல் அணிசே வலெனப்*
*பாடும் பணியே பணியா அருள்வாய்*
*தேடும் கயமா முகனைச் செருவில்*
*சாடும் தனியா னைசகோ தரனே"*

என்பது பாடல்.

மயில் தோகையை விரித்து ஆடும்போது, ஓங்கார வடிவம் காணப்படுவதால் 'ஆடும்பரி' என்றார்.

'ஆ' என்பதில் அகரமும் 'டு' என்பதில் உகரமும் 'ம்' என்ற ஒற்றும் சேர்ந்து அ+உ+ம் என்ற பிரணவத்தை அறியும்படி ஆசிரியர் நினைப்பூட்டுகின்றார்.

*"ஆனதனி மந்த்ரரூப நிலை கொண்டது*
*ஆடு மயிலென்ப தறியேனே"*

—*திருப்புகழ்*

மயிலின் வளைந்த கழுத்தும், விரிந்த தோகையும் பிரணவ வடிவைத் தெரிவிக்கின்றன.

பரி = குதிரை — தாங்குதலால் பரியெனப்பட்டது.

*"ஓகாரப் பரியின் மிசை வரவேணும்"*

— *திருப்புகழ்*

வேல் = ஞானமாகிய வேல்
= மந்திரவேல்.

வேல் என்பது முருகப் பெருமானுடைய ஞானசக்தி யாகும். எல்லாவற்றையும் வெல்வது வேல். ஒரு புறம் மயிலும் மறுபுறம் சேவலும் நிற்க, நடு நாயகமாக நின்று அருள் புரிவது வேல். அனைத்துயிரையும் ஈன்ற அன்னை பராசக்தியே முருகனின் கைவேலாகக் காட்சி தருகின்றாள். இச்சை, செயல் ஆகிய சக்திகளை வள்ளி, தெய்வயானை அம்மையாகவும் ஞானத்தை வேலாகவும் கொண்டவன் குமரன். ஞான சக்தியை வழிபடுகின்றவர்களின் துன்பமகற்றி மெய்ஞ்ஞானம் தருகின்றான்.

> 'வேலு மயிலும் நினைந்தவர் தந்துயர்
> தீர அருள்தரு கந்தன்' —திருப்புகழ்.

பாடும்பணி—'வேலும் மயிலும் துணை' என்ற மந்திரத்தை உச்சரிக்கும் பணி—உன் புகழைப் பாடுவதே எனது தொழிலாக வேண்டும் எனக் கூறுகின்றார்.

> 'தோகைமேல் உலவும் கந்தன் சுடர்க்கரத்திருக்கும் வெற்றி
> வாகையே சுமக்கும் வேலை வணங்குவது எனக்கு வேலை'

எனப் பாரதியார் பாடுகின்றார்.

அழகிய சேவல் கதிரவனுடைய வரவை உணர்த்துகின்றது. அது ஞான சூரியனாகிய முருகனுடைய வரவையும் உணர்த்தும். அறியாமை என்னும் இருளைப் போக்கும்.

> 'கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
> வாழிய பெரிதென்று'

தெய்வமகளிர் பாடி யாடியதாகத் திருமுருகாற்றுப்படையில் வருகின்றது.

பற்றற்ற நிலையில் விளையும் பேரின்ப நலத்தை அடியேனுக்கு உணர்த்தியருள மேண்டுமென இரண்டாவது பாட்டில் கேட்கின்றார். முருகக் கடவுளே, தேவர்களுக்குத் தலைவனே, திருவிளையாடல்கள் புரிகின்றவன் நீயல்லவா? பற்று நீங்கவும் ஆணவம் ஒழியவும் மேலான பேரின்ப நிலையை அடைந்து உய்யும்படி அருள்புரிவாயாக என வேண்டுகின்றார்.

> 'உல்லா சநிரா குலயோ கவிதச்
> சல்லா பவிநோ தனும்நீ யலையோ
> எல்லா மறஎன் னைஇழந் தநலம்
> சொல்லாய் முருகா சுரபூ பதியே'

என்பது பாடல்.

என்னை இழந்த நலம்—சீவன் என்ற தன்மை இழந்து சிவன் என்னும் தன்மை அடையும் நிலை எனப் பொருள் கொள்ளலாம்.

'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறு'

—திருவாசகம்.

பற்று அற்ற இடத்தில் பேரின்ப நலம் தோன்றும். தன்னை இழப்பதில் நலம் விளைகின்றது.

'யான் எனதுஎன்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்' —குறள்.

உனது அருள் நலத்தைப் பெறும் அறிவுரையைக் கூறுவாயாக என வேண்டுகின்றார்.

'ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணசலம் அமர்ந்த பெருமாளே''

—திருப்புகழ்.

தாம் அடைந்த அநுபூதி இன்பத்தில் திளைத்தவராய்த் தம்மை இழந்த நலத்தைக் குறிப்பிடுகின்றார்.

'தந்தது உன் தன்னைக் கொண்டது
என் தன்னை' —மணிவாசகர்

எல்லாம் அற்றபோது தன்னை இழந்த நிலை வருகின்றது.

'தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்''

—அப்பர்.

'எனைத் தன் வசத்தே ஆக்கும்
ஆறுமுகவா சொல்லொணுது இந்த ஆனந்தமே'

—கந்தரலங்காரம்

'எல்லாம் இழந்து சும்மா விருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்டவா'

—கந்தரலங்காரம்.

முருகன் - முருகு - இளமை - அழகு மாருத இளமையோடிருக்கும் முருகன் குழந்தைத் தெய்வமாக வந்து காட்சியளிக்கிருன். நான்மறைக்கும் எட்டாதவனுக இருக்கும் முருகன் குழந்தை உள்ளம் படைத்தவர்களுடைய அன்பிற்கு எட்டுகின்ருன்.

(தொடரும்)

# பத்தொன்பதாம் நூற்றுண்டுக் கிறிஸ்தவக் கம்பர் திரு. என்றி ஆல்பிரட் கிருஷ்ண பிள்ளை

[வீ. ஞானசிகாமணி, எம். ஏ.,
ஆய்வு மாணவர், தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.]

''தெய்வம் என்னிருதயத்தைத் திறந்தார் அவரைத்
துதிக்க என்வாயைத் திறந்தேன்'' —எ. ஆ கி.

என்றி ஆல்பிரட் கிருஷ்ண பிள்ளை கிறிஸ்தவ எழுத்தாளர்களுக்குள்ளே ஒப்பற்ற ஒரு பெருங் கிறிஸ்தவப் புலவராவர். அழியாப் புகழுடலெய்திய தம் இலக்கியப் படைப்புகளினுல் அவர் தம் பெயரை இலக்கிய, சமய உலகங்களில் நிலைபெறச் செய்துள்ளார். இதனுல், தம் எழுத்துக்களின் மூலம் அவர் ''இறந்தும் பேசுகின்றுர்''. இக் கட்டுரையில் அவருடைய வாழ்க்கையினையும் தமிழ்த் தொண்டினையும் பொதுவாக ஆராயலாம்.

வாழ்ந்த கால நிலை :

எ. ஆ. கிருஷ்ண பிள்ளை வாழ்ந்த பத்தென்பதாம் நூற்றுண்டில் ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம் இந்தியாவில் பரந்து வளர்ந்து கொண்டிருந்தது. ஒரு புறம் இந்திய மன்னர்கள் ஒற்றுமையின்றி ஆங்கிலேயரின் பிரித்தாளும் அரசியல் தந்திரத்திற்கு இரையாகிக் கொண்டிருந்தனர். மற்ருெரு புறம் தந் நாட்டுப்பற்றுணர்வு விழிப்பு மக்களிடையே தோன்றியதனுல் விடுதலைப்போர் உணர்ச்சி நாட்டில் ஆங்காங்கே இருந்து வந்தது. தமிழகத்தில் இவ் விடுதலைப் போரின் 'சுடர்' பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் '1806' நூலில் கூறும் வேலூர்ப் புரட்சியிலும் அதற்கு முற்பட்ட நிலையில் 'வீரத் தலைவர், புலித்தேவர்,' 'மருதிருவர்' ஆகியோர் வாழ்விலும் ஒளிவீசக் காணலாம். தென்னகத்தில் இவ் விடுதலைப் போர் இம்மட்டில் நின்றது எனலாம். இதன் 'சோதி' 1857 இல் வடக்கில் அயலவர் ஆட்சியை எதிர்த்து விடுதலைக் குரல் எழுப்பிய 'முதல் இந்திய சுதந்திரப் போர்.' இப்போரின்போது வடவகம் அரசியல் புயலில் அல்லற்பட்டது ; ஆனுல், தென்னகம் அமைதியில் ஆழ்ந்திருந்தது.

பொருளாதார ஏற்றத்தாழ்வும் சாதி சமய ஏற்றத்தாழ்வும் மலிந்திருந்த நிலை மக்களுணர்வில் கலக்கலாயிற்று. கிறிஸ்தவ

சமயமும் அக்காலத்தில் எல்லா இன மக்களிடத்திலும் பரவலாயிற்று. 1857 இல் கிருஷ்ண பிள்ளைக்கு வயது முப்பது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் சமூக சமய விழிப்புணர்ச்சி, தமிழ் இலக்கிய, சமய பண்பாட்டில் தோய்ந்து வளர்ந்து வந்த கிருஷ்ண பிள்ளைக்குத் தம் தாய்மொழியின் பழைய இலக்கியத்தையும் சமயத்தையும் புதிதாக நாட்டில் பரவிவரும் ஒளியால் ஆராய்ந்து காணும் சூழலை நல்கியது. இதனுல், 1857 இல் தென்னகத்தின் அமைதியான சூழலில் இயேசுவின் நற்செய்தியின் செயல் விளைவால் கிருஷ்ண பிள்ளையின் மனதில் ஓர் உயிர்ப் புயல் எழும்பிற்று.

**ஆய்வுலகில் கிருஷ்ணபிள்ளையின் பெருமை:**

முன்னுள் கோவைப் பேராசிரியர் டாக்டர் எ. ஜெ. அப்பாசாமி அவர்கள் கிருஷ்ண பிள்ளையைப் பற்றி எழுதிய நூல், ''கிறிஸ்தவத் தமிழ்ப் புலவர்'' (Tamil Christian Poet) 1966 இல் உலகக் கிறிஸ்தவ இலக்கிய நூல் வெளியீட்டு வரிசையில் இலண்டனில் வெளியிடப் பெற்றது. இவ்வாங்கில நூல் கிருஷ்ண பிள்ளையை உலகத்திற்கு அறிமுகப்படுத்திற்று. அமெரிக்க அறிஞர் டாக்டர் டென்னிஸ் அட்சன் கிருஷ்ண பிள்ளையின் வாழ்க்கையினைச் சமய வரலாற்று அடிப்படையில் நுணுகி ஆராய்ந்து, அண்மையில் அமெரிக்கக் கல்வி நிலையம் (Clarement Graduate School) ஒன்றிற்கு, தம் டாக்டர் பட்டத்திற்கு ஒரு பேராய்வுக் கட்டுரையினை (Thesis) எழுதினுர். இவ்விரு அறிஞர்களின் எழுத்துக்கள் கிருஷ்ண பிள்ளையை ஆய்வுலகம் போற்றும் சிறப்பு வாய்ந்த ஒரு பெரும் புலவராக்கின.

## 'கிறிஸ்தவக் கம்பன்'

வித்துவான் தங்கராசனுர் 1958இல் '''கிறிஸ்தவக் கம்பன்' கிருஷ்ண பிள்ளை'' என்ற நூல் எழுதிப் புலவரைக் 'கிறிஸ்தவக் கம்பன்' என்றுர். ஆனுல் இதுகாறும் தமிழகத்தில் புலவர் கிருஷ்ண பிள்ளை அவர்களின் வாழ்க்கையும், தமிழ்த்தொண்டும் முழுமையாக ஆராயப் பெறவில்லை என்பது ஒரு பெருங் குறையாகும்.

## புலவர் வாழ்க்கை

**பெற்றேரும் பிறப்பும்:**

1827 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் நெல்லை மாவட்டத்தில், கரையிருப்பு கிராமத்தில், சமயப் பற்றுறுதி மிக்க ஒரு வைணவ வேளாளர் குடும்பத்தில் பெற்றேரின் தவச்

செல்வனாய்க் கிருஷ்ண பிள்ளை தோன்றினர். சிறந்த வைணவப் பத்தரான அவருடைய தந்தையார் சங்கரநாராயண பிள்ளை தமிழிலும் சமற்கிருதத்திலும் தேர்ந்த புலமை மிக்கார். புலவரின் அன்னையார் தெய்வநாயகி அம்மையார் எழுத்தறியாதார். எனினும் கல்லாமலே கற்ற கல்வியும் திறமையும், நிறைந்த பத்தியும் பண்பாடும் உடையார். புலவரும், அவர்க்கு ஏழாண்டுகள் இளைஞருமான முத்தையா பிள்ளையுமே குடும்பத்தில் எமனுக்கு எஞ்சி நின்ற குழந்தைகள். ஏனைய இரு பெண் மகவுகளும் அரும்பிய நிலையிலேயே உதிர்ந்தனர்.

**இளமைக் கல்வி :**

இவர்க்கு முதலாசிரியர் இவர்தம் தந்தையாரே. தமிழ், சமற்கிருதம் ஆகிய இருமொழிக் கல்விக்கும் தந்தையாரே வித்திட்டார். அடுத்து மாணிக்கவாசகத் தேவர் என்பாரிடம் கம்பரைப் போன்று திண்ணைப் பள்ளியில் 'எண்ணும் எழுத்தும்' தொடர்ந்து பயின்றார். பிலவணர் என்ற அந்தணர்பால் தம் மகன் சமற்கிருத மொழிப் புலமைபெற தந்தையார் ஏற்பாடு செய்தார். ஆங்கிலக் கல்வி, தாம் வாழ்ந்த ஊருக்கு அருகில் கிடைக்காமையாலும், தந்தை தம் உயிரனைய மைந்தனைவிட்டுச் சற்றேனும் பிரிந்து வாழ விரும்பாமையாலும் கிருஷ்ண பிள்ளைக்கு ஆங்கிலக் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்திலது. இஃது அவர்க்கு ஒரு பெருங்குறையே. பின்னரேனும் அவர் தம் இளவலைப்போன்று ஆங்கிலம் கற்க முனைந்ததாக அறியப் படவில்லை.

**சமயச்சூழல் :**

சங்கரநாராயணர் பற்றுறுதிமிக்க வைணவர் என்பது குறிப்பிடப் பெற்றது. "இராமாயணம், திருவாய்மொழி, ஐயங்கார் பிரபந்தம் முதலியவைகள்தாம் என்பிதாவுக்கு ஆத்மார்த்தமான காலக்ஷேபம்" என்று கிருஷ்ண பிள்ளை குறிப்பிடுவதால் அவரின் சமய இலக்கியப்பற்று விளங்குகின்றது. நிலக் கிழாராகிய அவர் இல்லத்தில் காலைச் சிற்றுண்டிக்கு முன்னர் வழிபாடு நடைபெறும் ; அதில் குடும்பத்தினருடன் வந்த விருந்தினரையும் பங்குகொள்ளச் செய்வர் சங்கரநாராயணர் ; இவர் கம்ப ராமாயணத்திலிருந்து சில கவிகளைப் பாடி அவற்றிற்குப் பொருள் விளக்கம் சொல்லுவார். இது நாள்தோறும் இரண்டு மணி நேரமளவும் நடைபெறும். இக்காலைக் கடனை ஆற்றாமல் சங்கரநாராயணர் காலை உணவு கொள்ளார். கிருஷ்ணபிள்ளை தம் பன்னிரண்டாம் வயதிலேயே வழிபாட்டின்போது தம் தந்தையார்க்கு உதவியாகக் கம்ப

ராமாயணப் பாடல்களை உரக்கப் படிப்பார். ஆம், புலவருக்கு இளமையிலேயே வாய்த்த கம்பராமாயண வகுப்பு அது. இதனால் இளமையிலேயே கம்பருடைய இராமாயணத்தின் பெரும்பகுதி இவர்க்கு மனப்பாடமாய் இருந்ததில் வியப்பில்லை. இந்தச் சமயச் சூழல் பிற்காலத்தில் கிருஷ்ண பிள்ளையினுடைய சமய வாழ்விற்கும் இலக்கியப் படைப்பிற்கும் பெரிதும் வித்திட்டது. கணவரின் கம்பராமாயண விளக்கவுரைகளின் மூலம் செவிவழிப் புலமை பெற்ற தெய்வநாயகியார் பிற் காலத்தில் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

### இளமைத் திருமணம் - குடும்பப் பொறுப்பு :

தந்தையார் தம் மறைவுக்கு முன்னரே அருமைச் செல்வனின் திருமணத்தைக் காண விழைந்தார். கிருஷ்ண பிள்ளைக்கு வயது பதினன்கு; திருச்செந்தூரைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுமியைத் தம் மகனுக்கு மணமகளாகத் தேர்ந்தெடுத்தார். திருமணம் மணமகள் இல்லத்தில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. புலவர், மணம் நடந்த ஈராண்டுகளுக்குப் பின்னர், எதிர்பாராத நிலையில் தந்தையாரை அவருடைய 47 ஆம் வயதில் இழந்தார். குடும் பத்தின் தலைமைப் பொறுப்பு 16 வயது கிருஷ்ண பிள்ளைமீது விழுந்தது. தந்தையின் பணியைத் தனயனுக்கு வழங்கினர் இரக்க உணர்வு மிக்க நிலக்கிழான்மார்.

### கிறிஸ்தவர்களைத் தாக்குதல் - ஒரு பெருந் திருப்பம் :

கிருஷ்ண பிள்ளைக்கு வயது 18. தம் வாழ்விடத்திற்கு அண்மையிலிருந்த நல்லூரில் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் சொல்லும் செயலும் உயர்குல வேளாளரான கிருஷ்ண பிள்ளை முதலான பலருக்கு வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக் கியது. அவர்களை ஒறுத்தல் தம் கடமை என உயர்குலத்தோர் சிலர் எண்ணினர். கிருஷ்ண பிள்ளை அக் கூட்டத்திற்குத் தலைவரானர். நல்லூர்க் கிறிஸ்தவர்கள் நன்ருகத் தண்டிக்கப் பட்டார்கள். படையுடன் சென்றவர்கள் மிகுந்த கொள்ளைப் பொருளுடன் வீடு திரும்பினர்கள். ஒறுக்கப்பட்ட கிறிஸ்த வர்கள் ஆங்கில ஆட்சியாளரின் உதவியை நாடினர். தாக்குதல் நடத்திய கூட்டத்தினரைக் கைது செய்யத் தேடினர். கிருஷ்ண பிள்ளை பாளையங்கோட்டைக்குத் தப்பிச் சென்ருர். இந்தத் துன்புறுத்தல் நிகழ்ச்சியிலும், அடுத்து மனமாற்றமடைந்த வாழ்விலும் கிருஷ்ண பிள்ளை பவுல் அரு ளடியாரை ஒத்துள்ளார்.

**தமிழறிஞர் :**

பாளையங் கோட்டையை அடைந்த கிருஷ்ண பிள்ளை தம் இளவல் முத்தையா பிள்ளையுடன், காலத்தை வீணாக்காமல் தமிழ் இலக்கிய இலக்கணக் கடலுள் மூழ்கலானார் தம் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பில் ''18 வயதுக்கு மேல் நானும், என் சகோதரர் முத்தையா பிள்ளையும் வீண் காலக்ஷேபஞ் செய்யாமற் சொந்த முயற்சியாய்த் தமிழிலக்கியப் புஸ்தகங்களைத் திருந்தப் படித்து வந்தோம். அத்தோடு இலக்கண நூல்கள் அச்சிட்ட பிரதி அப்போது கிட்டாததலால் வெகு பிரயாசத்தின் பேரில் ஒரு பெரியவரிடத்திருந்த நன்னூல் முதலிய இலக்கணக் கிரந்தங்களை வாங்கி, ஓலையேட்டுப் புஸ்தகங்களில் எங்கள் சொந்தக் கைப்பட எழுதி வைத்தோம். அக்காலத்து இலக்கண மறிந்த வித்வான்கள் எங்கள் ஜில்லாவில் இரண்டு மூன்று பேர் தவிர வேறு கிடையார். இவர்களில் வண்ணார் பேட்டையி லிருந்தவரும், கனம் ரேனியுஸ் ஐயர், கிளார்க் ஐயர் முதலானவர்களுக்குத் தமிழ்ப் படித்துக் கொடுத்த முனிஷியுமாயிருந்த மகாவித்வான் திருப்பாற்கடனாத கவிராஜரவர்கள் என் பிதாவுக்கு இஷ்டராயிருந்த நிமித்தம் அந்த ஹேதுவை முன்னிட்டு அவர்களை யடுத்து இலக்கணம் வாசிக்க முயன்றோம். ஒன்றரை வருஷக் காலஞ் சிசுப்பணிவிடை செய்து படித்தோம்'' என்று, தாம் கல்வி கற்றதை எழுதியுள்ளார்.

**தமிழ்ப் பண்டிதர் :**

தம் முயற்சியாலும் தளரா உழைப்பாலும் கிருஷ்ண பிள்ளை நுண்மாண் நுழைபுல மிக்க தமிழறிஞராயினர். 1853ஆம் ஆண்டு மேத் திங்கள் 27 ஆம் நாள் 'நற்செய்தி பரப்பும் சங்கத்தாரின்' (S. P. G.) சாயர்புரம் கல்விச் சாலையில் தமிழ்ப் பண்டிதரானார். இவ் வேலைக்காக இவர்க்குப் போட்டித் தேர்வு வைத்து, இவரைத் தேர்ந்தெடுத்து வேலையிலமர்த்தியவர் டாக்டர் கால்டுவெல் கல்விச் சாலையில் தமிழ் கற்பித்ததுடன், அதன் தலைவர் மறைத்திரு. எச். சி. அகஸ்டபில் என்பார்க்குத் தமிழ் கற்பித்து வந்தார். அக்ஸ்டபில், புலவருக்கு இயேசுவின் நற்செய்தியை உபதேசிக்கலானார். இந்த உபதேசத்தைக் குறித்துப் புலவர், 'ஆரம்பத்திலெனக்கு வெறுப்பாயுங் கசப்பாயுமிருந்தாலும், வரவர அவர்கள் காட்டுகிற நற்குண நற்செய்கைகள் என் மனதிற்பட்டு அவர்கள் சொல்லுகிற வார்த்தைகளுக்குப் பேசாமலிருக்க வென்னை ஏவினது' என்று எழுதியுள்ளார்.

*''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு''*

என்ற பொய்யாமொழியாரின் பகுத்தறிவுக் குறள் கற்ற கூர்த்த மதியினரான புலவர், தாமே உண்மையை ஆராய்ந்தறிதற் பொருட்டுத் திருமறையை வாங்கிக் கற்கலானுர். இதனை, "சில காலம் பொறுத்து ஒரு தமிழ் வேதாகமத்தை உபாத்தியாய ரொருவரிடத்தில் இரவலாக வாங்கி ஆதி தொடங்கி வாசிக்க ஆரம்பித்தேன்" என்று எழுதியுள்ளார்.

**முத்தையா பிள்ளையின் மனமாற்றம் :**

1855இல் 'சபை திருத்தொண்டு சங்கத்தை' (C. M. S.)ச் சேர்ந்த பராந்தாப் பள்ளியில் முத்தையா பிள்ளை தமிழ்ப் பண்டிதரானுர். இவரும் மறைத்திரு. எச். சி. அகஸ்டபிலுக்குச் சிறிது காலம் தமிழ் கற்பித்தார். அந்நாட்களில் இயேசுவின் நற்செய்தி, நெல்லையில் உயர்குலத்தாரிடையிலும் பரவியது. உயர்குலத்தினர் கிறிஸ்தவராதல் அக் காலத்தில் அவ்வளவு எளிதன்று. முத்தையா பிள்ளையுடன், செல்வாக்குள்ள இரு பெருங் குடும்பத்தைச் சேர்ந்த தனக்கோடி ராஜாவும், மனக் காவலப் பெருமாள் பிள்ளையும் திருமுழுக்குப் பெறத் தீர்மானித் தனர். தனக்கோடி ராஜா அரசபுத்திர மரபினர். இவர்கள் கிறிஸ்தவர்களாதலைத் தடுக்க உறவினர்கள் நீதிமன்றத்திற்கும் முறையிட்டனர். மூவரும் வயது வந்தவர்களாகையால் அவர்கள் வாக்குமூலப்படி தீர்ப்பு உறவினர்க்கு ஏற்றதாக அமையவில்லை. தங்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மூவரும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். முத்தையா பிள்ளையின் நடத்தை கிருஷ்ண பிள்ளைக்கும் அவருடைய அன்னையார்க்கும் பேரதிர்ச்சியையும் சொல்லொணுத் துயரத் தையும் தந்தது.

**வேலை விலகல் கடிதம் :**

முத்தையா பிள்ளையின் குணப்படுதலுக்குப் (After Conversion) பின்னர் எச். சி. அகஸ்டபில் கிருஷ்ண பிள்ளையை அழைத்து, அவர் தம்பியின் திருமுழுக்கைக் குறிப் பிட்டு, புலவர் கிறிஸ்தவராதற்கு இன்னும் என்ன தடை என்று வினவினுர். கிறிஸ்தவனுதலும் ஆகாததும் தம் விருப்பம் என்று சொல்லிப் புலவர் வேலையிலிருந்து விலகிக் கொள்ள விலகல் மடல் எழுதி நீட்டினுர். என்றுலும், இனி ஒரு போதும் புலவர் கிறிஸ்தவராதலைப் பற்றிக் கேட்கமாட்டேன் என்ற பள்ளித் தலைவர் வாக்குறுதி கொடுத்துப் பணியில் தொடர்ந்து இருக்கும்படி வேண்டிக் கொண்டதற்கு இணங்கக் கிருஷ்ண பிள்ளை பணியைத் தொடர்வதாக ஒப்புக் கொண்டார்.

(தொடரும்)

# மறைமலையடிகள் 20 ஆம் நினைவு விழாவும், பொதுநிலைக் கழக விழாவும்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் சார்பில் தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகள் 20 ஆம் ஆண்டு நினைவு விழாவும், பொதுநிலைக் கழக விழாவும் 30-8-71 திங்கட்கிழமை மாலை 6 மணிக்குப் பல்லாவரம் மறைமலையடிகள் கலைமன்றத்தில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது.

விழாவை ஒட்டி அமைக்கப் பெற்ற காட்சியில் 1936 முதல் இந்தி எதிர்ப்பியக்கம் பற்றிய நூல்களும், அறிக்கைகளும், கடிதங்களும், படங்களும், அடிகளார் முதற் பதிப்பு நூல்களும், கடிதங்களும், பொறியியல் மேதை பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் எழுதிய நூல்களும், ஒலி விளக்க அட்டைகளும் பிறவும் அழகுபெற வைக்கப்பெற்றிருந்தன.

மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியனவர்கள் அடிகளார் வாழ்ந்த மாளிகையினையும் அங்கே அமைக்கப் பெற்றிருந்த காட்சியினையுங் கண்டு கழிபேருவகையடைந்தார்கள்.

இறைவணக்கத்துடன் விழா, நாவலர் அவர்கள் தலைமையில் தொடங்கியது. கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையா பிள்ளை வரவேற்புரையில் அடிகளார் மாளிகை இருக்குஞ் சாவடித் தெருவுக்கும், அப்பகுதிக்குள்ள சமீன் பல்லாவரத்துக்கும், அப்பகுதியில் இருக்கிற அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கும், சைதாப்பேட்டை நந்தனத்திலுள்ள அரசினர் கலைக் கல்லூரிக்கும் 'மறைமலையடிகள் திருப்பெயரைச்' சூட்டும்படி மாண்புமிக்க அமைச்சரவர்களிடம் வைத்த கோரிக்கையினை அவர்கள் ஏற்று ஆவன செய்வதாகத் தமது தலைமையுரையில் சொன்னமை மிகவும் போற்றுதற்குரியது. அடிகளார் பேசிய பேச்சுக்களும் எழுதிய நூல்களுமே இற்றைத் தமிழரசு அமைப்பதற்கு வாயிலாயிற்று என்பதை மிகவும் உணர்ச்சியோடு பேசினார்கள். அடிகளார்க்கு விரைவிலே சென்னையில் சிலை அமைத்தல் வேண்டுமென்ற கருத்தையும் உள்ளப் பூரிப்போடு தெரிவித்தார்கள்.

சட்டத்துறை ஆட்சிமொழிக் குழுச் செயலுறுப்பினர் திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ.,பி.எல்., அவர்கள் அடிகளார் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து அரிய உரையாற்றினர். பேராசிரியர் ஆலால சுந்தரஞ் செட்டியார், எம். ஏ., அவர்கள் 'மறைமலையடிகள் அறிவுரைக் கோவை' என்னும் நூலிற் கண்ட அரிய பொருள்களை யெல்லாம் விளக்கிக் கூறி வெளியிட்டனர். ''தனித் தமிழ்க் கொள்கையும் பொதுநிலைக் கழகமும்'' என்னும் பொருள் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ., பி. எச்டி. அவர்கள் அடிகளார் வரலாற்று நூலைச் சான்றாக வைத்துப் பேசினர். மறைமலையடிகள் நூல் நிலைய நூலகர் திரு இரா. முத்துக்குமாரசாமி நன்றி நவில விழா இனிது முடிந்தது. அமைச்சர் நாவலர் அவர்களின் சொற்பொழிவும், பிற சொற்பொழிவுகளும் அடுத்த இதழில் விரிவாக இடம் பெறும்.

---

திருவாளர் சுரேந்திரநாத் ஒகலி ஆரியா அவர்கள் தாம் தமிழில் எழுதிய ''ஸ்ரீ நடராஜ தரிசனம்'' என்னும் நூலை எமது பார்வைக்கு அனுப்பி வைத்தமைக்காக அவர்கட்கு நன்றி செலுத்துகின்றேம். இப்போது எமக்குள்ள பல வேலைத் தொல்லைகளின் இடையே அதனை முற்றும் படித்தல் இயலவில்லையாயினும் அரைவாசியாவது படிக்கக் கிடைத்தமைக்காக மிக மகிழ்கின்றேம். படித்தவரையில், இந்நூல், அம்பலக் கூத்தன் அருள் அடையாள உண்மைகளை நன்கெடுத்து விளக்கி, எல்லாம் வல்ல இறைவன் அடியார்க்கெளியனும் எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற இரக்கமும் அன்பும் அருளும் உடையனும் அவ்வுயிர்களின் நலத்தையே கோரித் தன் பெருமையைத் தான் அறியானும் நிற்கும் விழுமிய நூல்களைச் சைவசித்தாந்த நூற்கருத்துக்கு இசைய வைத்து அறிவுறுக்குந் திறத்ததாய் மிளிர்கின்றது. இந்நூலின் உரைநடை, இடையிடையே சொற்பொழிவின் நடை நலம் வாய்ந்து உள்ளக்கிளர்ச்சியினை விளைவிக்குந் திறத்ததாயும் வயங்குகின்றது. ஆரியா அவர்கள் தெலுங்கு நாட்டிற் பிறந்து வளர்ந்து வடமொழிக் கலப்பு மிகுதியும் உடைய தெலுங்கு மொழியையே பயின்றவராகையால், இப்போது தாம் புதிது பயின்று வருந் தமிழில் எழுதியிருக்கும் இந்நூல் வடசொற் கலப்பு மிகுதியும் உடையதாயும், ஆங்காங்கு இலக்கணப் பிழையுடையதாயுங் காணப்படுகிறது. அடுத்த பதிப்பில் இவ்விரண்டு குறைபாடுகளையும் நீக்கிவிடுவார்களாயின் அரும்பொருள் பொதிந்து விளங்கும் இந்நூல், நமது செந்தமிழன்னைக்குச் சிறந்த ஓர் அணிகலமாய்த் திகழும் என்பதிற் சிறிதும் ஐயம் இல்லை.

*24-7-'31.* மறைமலையடிகள்.

---


# மறைமலையடிகள் 20 ஆம் நினைவு விழா (30-8-71)




மாண்புமிகு கல்வியமைச்சரவர்கட்குக்
காட்சியிலுள்ள பொருள்களையும் படங்களையும் பற்றிக்
கழக ஆட்சியாளர் விளக்கிக் கூறுதல்



மாண்புமிகு கல்வியமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியனவர்கள்
தலைமையுரை ஆற்றுதல்



திரு. மா. சண்முகசுப்பிரமணியம், மாண்புமிகு கல்வி அமைச்சர்,
பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் முன்பு
கழக ஆட்சியாளர் வரவேற்புரை நிகழ்த்துதல்



திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள்
அடிகளார் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தல்

# தணிகைமணி டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் மறைவு

தவத்திரு தணிகைமணியவர்கள் 15-8-71 இல் 89 ஆவது அகவை யெய்தித் திருவருள் நினைவோடு 25-8-71 பிற்பகல் 4 - 45 மணிக்கு இறைவன் திருவடி நீழலடைந்தார்கள். அன்று பகல் 3 - 30 மணிக்குத் தவத்திரு ஐயா அவர்கள் கவலைக் கிடமான நிலையில் இருக்கிற செய்தி தொலைபேசியில் தெரிவிக்கப் பெற்றதும் யானும் என் மனைவியும் உந்து வண்டியில் அவர்கள் இல்லம் போய்ப் பார்க்கும்போது கண் திறந்தபடி உணர்வு ஒடுங்கி வரும் நிலையில் இருக்கக் கண்டேன். யான் வந்திருப்பதை உரக்கச் சொன்னேன். அதனைப் புரிந்து கொண்ட குறிப்புத் தெரியலானதும் கண் மூடப் பெற்று உயிர் அமைதியாகத் தமியேன் முன்பு பிரிந்தது யான் பெற்ற பாக்கியம் என்று வணங்கி ஆறுதலடைந்தேன்.



1882—1971

89 ஆவது பிறந்த நாளன்று மலர்மாலை அணிவித்து அவர்களிடம் வாழ்த்துப் பெற்றேன். அதுகாறும் தமது பிரிவு 1972 ஏப்ரலில் இருக்கும் என்று சொல்லிவந்தவர்கள் அன்று இன்னும் சில நாட்கள் தாம் என்று குறிப்பிட்டுச் சொல்லவே எனக்கு வியப்பைத் தந்தது. உடனே ''ஐயா இன்னும் மூன்று திருமுறைகட்கு ஒளிநெறி எழுத வேண்டுமே. அதனை எழுதி முடிக்கும்வரை தணிகைப் பெருமான் தங்களை அழைக்க மாட்டான்'' என்று சொன்னேன். அதனைக் கேட்டுப் புன் முறுவல் காட்டினார்கள்.

ஒரு பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய அரிய பெரிய பணியை அவர்கள் தாம் ஒருவரே செய்துள்ளார்கள். முதல் எட்டுத் திருமுறைகட்கு அவர்கள் எழுதிய ஒளிநெறி, ஒளி

நெறிக் கட்டுரை நூல்களைக் கழகவழி வெளியிடும் பேற்றினைத் திருவருள் தமியேனுக்குத் தந்தமையினை எண்ணி எண்ணி இறும்பூதெய்துவேன். 9ஆம் திருமுறையாகிய திருவிசைப்பா வுக்கும் திருப்பல்லாண்டுக்கும் ஒளிநெறியும் ஒளிநெறிக் கட்டுரையும் தாமே சொல்லி எழுதச் செய்து சரிபார்த்து அச்சிடுவதற்குத் தமியேனிடம் ஒப்புவித்து நான்கு திங்க ளாயிற்று. இவ்வாவணித் திங்களிலே அதனை அச்சுக் கோப் பதற்கு எடுத்துக் கொள்வதாக அவர்களைக் காணும்போ தெல்லாம் சொல்லி வந்தேன். அதன் மெய்ப்பினை அவர்கள் பார்த்துத் திருத்துவதற்கில்லை. தாம் மெய்ப்பினைத் திருத்த முடியாத நிலை ஏற்படும் என்றெண்ணிக் கையெழுத்துப் படியினை ஒருமுறைக் கிருமுறை நன்கு பார்வையிட்டுத் தந்துள் ளனர்.

கூனிக் குறுகிப் பிறர் உதவியோடு வாழ வேண்டிய நிலையில் எப்படி ஒன்பதாவது திருமுறையினை எழுதி முடித் தார்கள் என்பது வியத்தற்குரிய செய்தியாகும்.

தவத்திரு ஐயா அவர்கள் திருத்தணிகைப் பெருமானை மறவாத சிந்தையராய் வாழ்ந்து அருந்தொண்டாற்றி அமைதி யாகத் திருவடி நீழல் அடைந்தனர். அவர்கள் ஒளிநெறி, ஒளிநெறிக் கட்டுரைகள் எழுதாமல் விட்டுச் சென்ற 10, 11, 12ஆம் திருமுறைகட்கு இன்றையத் தமிழ்ப் புலவர்களில் எவராவது முன்வந்து அவர்கள் ஒன்பது திருமுறைகட்கு எழுதிய ஒளிநெறி, ஒளிநெறிக் கட்டுரைகளைப் படித்துச் சிந்தித்து அவர்கள் ஆய்ந்த முறையிற் சென்று ஒளிநெறி ஒளிநெறிக் கட்டுரைகளை எழுதுதல் வேண்டுமென்பது எனது விருப்பம். தணிகைமணி ஐயா அவர்கட்கு நாம் செய்யுங் கைம்மாறு அதுவே யாகும். இறைவன் அதனை நிறைவேற்றி யருள்வான் என்ற நம்பிக்கையுடையேன்.


தணிகைமணி ஐயா அவர்களைப் படைத்துத் தந்த தமிழன்னைக்கு நாம் வணக்கஞ் செலுத்தி வாழ்த்துவோம்.

வாழ்க தணிகைமணி! வாழ்க தமிழ்!

—வ. சுப்பையா

# பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை மறைவு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறையின் தலைவரும், அரிய தமிழ் நூல்கள் பல இயற்றியவரும், கேட்டார்ப் பிணிக்கும் வகையில் நல்ல தமிழில் உரையாற்றும் திறன்படைத்தவரும், சிறந்த எழுத்தாளருமான பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பி.எல். அவர்கள் 26-8-71இல் தமது 65ஆவது அகவையில் திருநெல்வேலியில் தமது இல்லத்தில் காலமானார்கள் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம்.



திருநெல்வேலியில் தோன்றிய அறிஞர் பெருமக்கள் பலர். அவர்களுள் பெருமதிப்புக்குரிய பேராசிரியராகத் திகழ்ந்த திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏறக்குறையக் கால் நூற்றாண்டு காலம் அரிய தமிழாராய்ச்சிப் பணியினைச் செய்து வந்தார்கள். பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்கட்கு அடுத்தபடியாக வைத்து எண்ணத்தக்க பேராற்றலும் பெரும்புகழும் படைத்த இப் பெரியார் அப்பர் விருந்து, வள்ளுவர் விருந்து, சிலப்பதிகார விருந்து, மாணிக்கவாசகர் விருந்து என விருந்து நூல்களைத் தமிழகத்திற்குத் தந்தவர். சைவசித்தாந்தத்தில் திரு. பிள்ளையவர்கட்கிருந்த பேரறிவு யாவராலும் போற்றிப் புகழப்படுகின்றது. சைவசித்தாந்தம்பற்றி இவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூலே இதற்குத் தக்க சான்றாகும். காசிப் பல்கலைக் கழகத்தில் இவர்கள் சைவ சித்தாந்தம் பற்றி ஆற்றிய சொற்பொழிவின் தொகுப்பு இந்நூல்.

இவர் சமயப்பற்று மிக்கவர். இவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் மிகப் பல. ஆங்கிலத்திலும் தமிழிலும் உரையாற்றும் திறனும் எழுதும் திறனும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற பேராசிரியர் இவர். கம்பராமாயணம் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் செய்து வந்த ஆராய்ச்சி மிகவும் போற்றுதற்குரியதாகும்.

நம் கழக விழாக்களில் திரு. பிள்ளையவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய அருந்தமிழ்ப் பேருரைகள் பல. மலர்கட்கு வரைந்த கட்டுரைகளும் பல. அவர்கள் கழகத்திடம் தொடர்புகொண்டு கழகப் பணிகட்கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார்கள்.

திரு. பிள்ளையவர்கட்கு 1966இல் மணிவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் இவருக்குத் "திருநின்ற தனியாளர்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றது. நாவுக்கரசரைத் தமக்கு வழிகாட்டியாகக் கொண்ட இப் பெரியாருக்கு அப்பட்டம் சாலப் பொருத்தமுடைத்தாகும்

இங்ஙனம் பல்லாற்றானும் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றிய இப்பேராசிரியர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்ப்பணியாற்றாமல் மறைந்து விட்டமை தமிழகத்திற்குப் பெரியதோர் இழப்பாகும். பேராசிரியரின் இன்னுயிர் இறையடியில் இன்புறுவதாக.

---

## சோதிட கலாநிதி
## சித்திரகவி அப்துல் கபூர்சாகிபு மறைவு

தஞ்சை மாவட்டம் திருவையாற்றைச் சேர்ந்த வண்ணச்சரபம், சித்திரகவி, புலவர் அப்துல் கபூர்சாகிபு அவர்கள் 20-8-71இல் காலமானார்கள் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். சித்திரகவி அவர்கள் சமயத்தால் இஸ்லாமியராயிருந்தபோதிலும் தமிழ் முருகனிடத்தில் நீங்காப் பற்றுடையவர். திருமுருகாற்றுப் படையை மனப்பாடம் செய்தவர். பொது நோக்குடையவர். எத்தகைய கவியினையும் விரைந்து பாடும் கவியாற்றல் மிக்கவர். சிறப்பாகச் சித்திரகவி இயற்றுவதில் அண்மைக் காலத்தில் இவருக்கு நிகரானவர் எவருமிலர் எனலாம். இவர் இயற்றிய 'சித்திரகவிமாலை' தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் பாராட்டினைப் பெற்றது.

இத்தகைய பெரும்புலவர் நம் கழகத்திடம் பற்றுமிக்கவர். கழகப் பணியினைப் பாராட்டிப் பாடல்கள் யாத்துள்ளனர். இவரது மறைவு தமிழ்க் கவிஞர் உலகிற்கு ஒரு பேரிழப்பாகும் மறைந்த கவிஞரின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## மறைமலையடிகள் எழுதிய சான்றிதழ்


'சித்திரகவிமாலை' எனப் பெயரிய இந்நூலை ஆக்கிய திரு. அப்துல் கபூர் சாகிபு அவர்களைப் பல ஆண்டுகளாக யான் நன்கு அறிவேன். மிறைக் கவி எனும் சித்திரகவி இயற்றுவதில் இவர்க்குள்ள புலமை வியக்கற்பாலதாயிருக்கின்றது. வல்லவன் கையில் நம் அருமைச் செந்தமிழ் மொழி எத்துணை வகையாக உருமாறி நடக்க வல்லதாய் வியப்பும் மகிழ்ச்சியும் பயக்கவல்லதாயிருக்கின்றதென்பதனை இந்நூலைப் பயில்வோர் தெள்ளிதினுணர்ந்து இன்புறுவர் என்னும் நம்பிக்கையுடையேன். தமிழ் பயிலும் மாணவர் ஒரோவொருகால் இத்தகைய செய்யுள் இயற்றுவதிலும் பழகுவதற்கு இந்நூல் ஒரு வழிகாட்டுவதாகும். இனிப் பொதுமக்கட்குப் பயன்படுந் துறைகளிலும் சாகிபு அவர்கள் தமது தமிழறிவைப் பயன்படுத்தி இறைவனருளால் நீடினிது வாழ்வார்களாக!

திருவையாறு
திருவள்ளுவர் ஆண்டு
௧௯௭௧ மாசித்திங்கள்

(ஒப்பம்) மறைமலையடிகள்.

# கழக ஆட்சிக்குழு உறுப்பினர்
# கோவைத் திரு. சு. நடராச பிள்ளை மறைவு

1964 இல் கழக ஆட்சிக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு. சு. நடராச பிள்ளை அவர்கள் 30-8-71 இல் பல்லாவரத்தில் நடைபெற்ற மறைமலையடிகள் 20-ம் ஆண்டு நினைவு விழாவுக்கு வருவதாக இருந்தவர்கள் திடுமென 24-8-71 இல் மயக்கமுற்று இறையடி சேர்ந்த செய்தி தெரிந்து துணுக்குற்றேன்.



அவர்கள் இராமநாதபுரம் அருப்புக் கோட்டையில் சைவ வேளாளர் குடும்பத்திலே பிறந்து கல்விகற்றுப் பி. ஏ. பட்டம் பெற்றுத் தம் சிற்றப்பா வழி ஊமைப் பிள்ளைகளைப் பேசவைக்கும் பயிற்சி பெற்றார்கள். கோவை நகராட்சி நடத்திவரும் ஊமைப் பள்ளியின் தலைமையாசிரியராகச் சில ஆண்டுகள் தொடர்ந்து பணிசெய்து கோவை நன்மக்கள் பாராட்டுதலைப் பெற்றார்கள். அதன்பின் சைதாப் பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று எல். டி. பட்டம் பெற்றார்கள். பெறவே கோவை நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியரா யமர்த்தப்பெற்றனர். பின்னர்ப் பள்ளித் தலைமையாசிரியராகி நகராட்சி உயர்நிலைப் பள்ளிகட்குக் கல்வி அதிகாரியாக உயர்த்தப் பெற்றார்கள். அந் நிலைகளிலும் கோவைப் பெருமக்கள் பலரின் நட்பையும் பெற்றார்கள். 55 அகவை நிரம்பியதும் நகராட்சிப் பணியினின்றும் ஓய்வு பெற்றுச் செங்கோட்டையா உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்தனர். பள்ளியின் பொறுப்பு முழுவதையும் அதனை நிறுவிய திரு. செ. இலக்குமணன் அவர்கள் திரு. நடராச பிள்ளையவர்களிடம் ஒப்புவித்தனர்.

60 அகவை எய்தவே தலைமையாசிரியப் பணியினின்றும் விலகினர். விலகினும், பள்ளிக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவந்தனர். அதன்பின் கழகச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுக் கழக வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தார்கள். அவர்கள் பிரிவு கழகத்துக்குப் பேரிழப்பாகும்.

அவர்கள் ஊமைப்பள்ளி யாசிரியராக இருந்த காலமுதல் உடன் பிறந்தார்போல் யான் அவர்களிடம் பழகி வந்தவன். கோவைக்குச் சென்றால் அங்கே பார்க்கவேண்டிய பெருமக்களையும் உயர் அலுவலர்களையும் அவர்களோடு சென்று தான் பார்த்து வருவது வழக்கம்.

1936இல் தமிழ்ப் பள்ளிகளில் வடநாட்டு இந்திமொழி கட்டாயப் பாடமாக்கப் பெறும் என்று தெரிந்தவுடன் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் வழி "தமிழ் நாட்டுக்கு இந்தி வேண்டுமா?" என ஓர் அறிக்கை அனுப்பி அறிஞர்களுடைய கருத்தினைக் கேட்டபோது 'இந்தியால் தமிழ் மொழிக்குக் கேடுண்டாகும்' என்ற கருத்தினை அழுத்தந் திருத்தமாக எழுதி அனுப்பினார்கள். அதனையும் வேறுசிவர் எழுதிய கருத்துக்களையும் அச்சிட்டுப் பரப்பினேன். கோவையில் இந்தி எதிர்ப்பியக்கத்தை வலுப்பட நடத்தினார்கள், வடவெல்லைப் பிரிவின்போது அவர்கள் தமது சீரிய கருத்துக்களை எழுதியனுப்பினார்கள்.

1967ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் கழகத்தின் 'திருவரங்கனார் நிலையம்' புதியதாகக் கட்டி அமைப்பதற்குக் கோவை ஆலையைச் சேர்ந்த பழைய கட்டிடத்தை விலை பேசி வாங்குவதற்கு என்னோடு உடன்வந்து உதவினர். 1970ஆம் ஆண்டில் கோவையில் கழகக் கிளை நிலையம் அமைப்பதற்கு இடம் அமைத்துக் கொடுத்ததோடு அதன் வளர்ச்சிக்கு இறக்கும்வரை அவர்கள் செய்துவந்த உதவிகட்குக் கழகம் பெரிதுங் கடமைப்பட்டுள்ளது.

அவர்கள் நல்ல எழுத்தாளர், பேச்சாளர், பொதுநலத் தொண்டர், எதனையுங் கொண்டு நடத்தும் திறமையாளர். பள்ளிப் பாடநூல்கள் சில எழுதியள்ளார்கள். 'அகநக நட்பதே நட்பு' என்ற முதுமொழிக் கெடுத்துக் காட்டாக விளங்கியவர்.

அவர்கள் பிரிவு பொதுவாகத் தமிழ்நாட்டுக்கும் சிறப்பாகக் கோவைக்கும், கழகத்துக்கும் பேரிழப்பாகும். அவர்கட்கு மனைவியும்; ஆண் மக்கள் இருவரும், பெண் மக்கள் மூவரும் இருக்கின்றனர்.

அவர்கள் ஆருயிர் இறையடியில் இன்ப அன்புற்றமர்க வென வேண்டுவோம்.

—வ. சு.

## திருப் பிள்ளையவர்கள் இந்தி மொழி பற்றி எழுதிய கட்டுரையில் ஒரு பகுதி

கன்னித் தண்டமிழின் பெருமையை நம் பாவலரேறு பாரதியார் கூறவேண்டுமே ஒழிய என்போன்றார் கூறுவது சரியன்று.

உலகம் தோன்றிய காலமுதல் இன்றுவரை இம் மொழியானது உலவி வருகின்றது. இம் மொழியில் தோன்றியுள்ள காவியங்கள் பல. இதன் இலக்கியப் பெருக்கைக் கூறுவது பண்டைப் பெருமையைப் பகருவதாகும். நம் தமிழ் மொழியின் இற்றை நிலை என்ன? தமிழ் மொழியின் நிலை சீர்குலைந்திருக்கிறது. பாரதியார் கூறுவதுபோல் புதுச் சாத்திரங்கள் தமிழில் இல்லை. இப் புதுச் சாத்திரங்களைத் தமிழில் ஆக்க இந்தி பயன்படுமா? இந்தியில் புதுச் சாத்திரங்கள் முதலில் இருந்தன்றோ நமக்கு அது அவற்றை உதவ வேண்டும்? புதுச் சாத்திரங்கள் நிரம்பியுள்ள ஆங்கில மொழியினுதவி கொண்டுதான் நாம் தமிழன்னைக்குப் புத்தாடை அளிக்கக்கூடும்.

# செய்திகளும் குறிப்புக்களும்

## இதற்குமா எதிர்ப்பு?

12-8-71 மாலை சென்னை தங்கசாலைத் தெருவிலுள்ள ஏகாம்பரேசுவரர் கோவிலில் தமிழக அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் தலைமையில் திருமுருக கிருபானந்த வாரியார் தமிழில் மலர்வழிபாட்டினைத் துவக்கி வைத்தார். அப்போது பார்ப்பனர் ஒருவர் தலைமையில் ஒருசிலர் கூடித் ''தமிழில் அருச்சனை கூடாது'' என்ற சொற்றொடர் அடங்கிய அட்டையைப் பிடித்து நின்று மறியல்செய்தார்களாம். அப்படிச்செய்தவர்கள் வேறு யாருமில்லை. எங்கு எப்பொழுது தமிழுக்கு ஆக்கம் தேடப் படுகிறதோ அங்கெல்லாம் இந்த நந்திகள் குறுக்கிட்டுப் பேச்சாலும் எழுத்தாலும் பிற குறும்புத் தனங்களாலும் மறைக்கும் பழக்கத்தை மேற் கொண்டவர்கள்தாம். எனவே இந்த எதிர்ப்பு நமக்குப் புதிதன்று.

முன்னர்த் தமிழ் இசை இயக்கம் தோன்றிய காலத்திலும், அதற்கு முன்னர் மறைமலை யடிகள் காலத்தில் தனித் தமிழ் இயக்கம் தோன்றிய காலத்திலும், ஆங்கிலத்திலுள்ள ஆட்சிச் சொற்களுக்கும், அறிவியற் சொற்களுக்கும் தூயதமிழ்ச் சொற்களை அமைக்குங் காலத்திலும் அவற்றை எதிர்த்தவர்கள்தாம் இன்று தமிழ் அருச்சனையையும் எதிர்க்கிறார்கள். இறைவனை வழிபடுவதிலும் குறுக்கிடும் இக் கோணல் மதியினரைக் கண்டு 'இதற்குமா எதிர்ப்பு' என மக்கள் வியந்து பேசுகின்றனர்.

## ஆந்திரத்தில் தெலுங்கு ஆட்சி மொழியாகிறது

ஆந்திர நாட்டு அரசினரால் நிறுவப்பட்ட மொழிக்குழு அண்மையில் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், ''தெலுங்கு ஆட்சி மொழியாக நல்ல வாய்ப்புக் கிட்டியுள்ளது. இன்னும் ஐந்து ஆண்டுகளில் மாநில ஆட்சி முழுமையிலும் தெலுங்கை ஆட்சி மொழியாக்கி விடலாம்'' என்னும் கருத்தைத் தெரிவித்துள்ளது. அது மட்டுமின்றி ஆட்சி மொழியின் வளர்ச்சியைக் கவனிக்க ஓர் ஆய்வுக் குழுவையும் ஏற்படுத்த வேண்டுமென அரசுக்குப் பரிந்துரை வழங்கியுள்ளது.

## தமிழக வரலாறு

தமிழ் நாட்டின் வரலாற்றை முறையாகத் தொகுத்தெழுத மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். மு. வரதராசனார் தலைமையில் தமிழக அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. பன்னெடுங் காலமாகச் சரியான வரலாறு இல்லாத பெருங்குறையைத் தீர்த்துவைக்கும் வகையில் இக்குழு சீரிய பணியாற்றுமென எதிர்பார்க்கிறோம்.

# மதிப்புரை

## வீரகாவியம்

ஆசிரியர் : கவியரசு முடியரசன்
கிடைக்குமிடம் : வள்ளுவர் பதிப்பகம், வடக்கு இராச வீதி, புதுக்கோட்டை. விலை : ரூ. 5.

இஃது அகம், புறம் என்னும் இருபெரு வாழ்க்கைப் பிரிவுகளின் இலக்கியமாகத் திகழும் ஓர் இனிய காவியம். காதல், வீரம், அவலம் ஆகிய சுவைகளை உள்ளடக்கிக் காட்சிப் படலம், திருமணப் படலம், மகப்பேறு படலம், படையெழுச்சிப் படலம், போர்ப் படலம் என ஐந்து படலங்களைக் கொண்டு இனிய நடையுடன் திகழ்கிறது. காவியம் 118 இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நல்ல, தூய, இனிய தமிழ் நடையில் அமைந்துள்ள காவியம். படிக்கப் படிக்கச் சுவை தரும். எடுத்தோம்—படித்தோம்—முடித்தோம் எனச் சுவை குன்று வகையில் அமைந்துள்ளது. காவியப் பகுப்பு முறை—பதிப்பு முறை ஆகியன போற்றத் தக்கன. அழகிய பதிப்பு. தமிழ் அன்பர்கள் விரும்பிப் படிக்க வேண்டிய நூல்.

## இராமலிங்கரும் தமிழும்

ஆசிரியர் : ஊரன் அடிகள்.
கிடைக்குமிடம் : சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம் சமயபுரம் அஞ்சல், திருச்சி மாவட்டம். விலை : ரூ. 1-25.

இராமலிங்க அடிகள் சமயத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. அவர் பரப்பிய அருட்பணிகளும் அங்ஙனமே. இவற்றையெல்லாம் 18 தலைப்புக்களில் செவ்வனே தொகுத்துத் தந்துள்ளார் இந் நூலாசிரியர். அடிகளின் வாழ்க்கை முறை, திருவருட்பா தோன்றிய வரலாறு ஆகியன விளக்கப்பட்டுள்ளன. இறுதியில் 'நாம் செய்ய வேண்டுவன' என்ற தலைப்பில் உள்ள வேண்டுகோள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இராமலிங்க அடிகளாரின் அருட்பணியைப் பரப்ப விரும்புவோர் இவ் வேண்டுகோள்களைப் படித்தறிதல் நலமாகும்.

## சித்தர் நாடி விஞ்ஞானக் கோர்வை

ஆசிரியர் : டாக்டர், எஸ். கலியாணராமன், R. I. M. P.
கிடைக்குமிடம் : 285 பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-14.
விலை: ரூ. 3-50.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, நோய்களின் மூல காரணத்தைக் கண்டறிந்து நோய் தீர்க்கும் முறை சித்தர் முறையாகும். அதுவே சித்த மருத்துவம் என்னும் நம் பண்டைத் தமிழ் மருத்துவ முறை. அம் முறையில் நாடிகளை ஆய்தல் ஒரு முக்கியமான பகுதி. அதனை விளக்குவதே இந் நூல். நூல் முழுமையும் செய்யுட்களால் ஆகியது. தமிழ் மருத்துவ அன்பர்கள் படித்தற்குரிய பயனுள்ள நூல். செய்யுட்களுக்கு விளக்கமும் தரப்பட்டுள்ளது. 4 அத்தியாயங்களும் 80 பக்கங்களும் கொண்டது. பயனுள்ள நூல்.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.